விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 06 திங்கட்கிழமை (22.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெ

# பாகிஸ்தானுடன் இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை

## சர்தாரியின் விஜயத்தின் போது ஆராயப்படும்



(கொழும்பு)

**பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இம்மாத இறுதியில் மேற்கொள்ளவுள்ள கொழும்பு விஜயத்தின் போது இலங்கை-பாகிஸ்தானுக்கு இடையிலான பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப் படுத்திக் கொள்வது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.** (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

வரவு செலவு திட்டத்தில் இம்முறை அரச சேவையாளர்களது வேதனத்தை 10 ஆயிரம் ரூபாயால் உயர்த்த வேண்டும்.

இல்லையேல் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டிவரும் என எதிர் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி குண்டசாலையில் இடம்பெற்று வரும் மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே அரசாங்கத்தினால் இன்று முன்வைக் (16ஆம் பக்கம் பார்க்க)

## புதிய எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவியில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது அமைச்சரவையும் அவரின் நிர்வாகத்தின் மூன்றாவது அமைச்சரவையுமான புதிய அமைச்சரவை இன்று காலை 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் சத்தியப்பிரமாணத்தையடுத்து பிரதியமைச்சர்கள் பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெறும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் மூலம் முதற் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இம் முறை அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சர் பதவியோ பிரதியமைச்சர் பதவியோ வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய அமைச்சரவையின் புது முகங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயலாளராக லலித் வீரதுங்க மீள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளராக லலித் வீரதுங்க மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது பதவிக் காலத்தை ஏற்றுள்ள நிலையிலேயே இம் மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற போது தனது செயலாளராக லலித் வீரதுங்கவை நியமனம் செய்தார்.

இதேவேளை (16ஆம் பக்கம் பார்க்க)

## முப்படையினரும் இணைந்து வடக்கில் பாரிய கூட்டுப் பயிற்சி

(மன்னார்)

இலங்கையில் முப்படையினரும்இணைந்து ஒன்பது நாட்கள் நீடிக்கும் பாரிய கூட்டுப் பயிற்சி ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

மன்னார் சிலாவத்துறையில் இருந்து அநுராதபுரம் மாவட்டத்தின் தந்திரிமலைப் பிரதேசத்தில் உள்ள மாவில்லு வரை இப் பயிற்சி நடவடிக்கைகள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக இடம்பெறும் இப் பயிற்சி நடவடிக்கையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 படைத் தரப்பினர் கலந்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கையில் இராணுவ கமாண்டோகள் மற்றும் விசேட படையினர் (16ஆம் பக்கம் பார்க்க)

## அட்மிரல் வசந்த கரன்னகொட தென்கொரிய தூதுவராக நியமனம்

(கொழும்பு)



இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தென்கொரியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்து வரும் நிலையிலேயே அவர் தென்கொரியாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இவர் பிரித்தானியாவுக்கான (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி-ஹக்கீம் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இந்த தகவலை கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீமுக்கு பிரதியமைச்சர் பதவி வழங்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில்அது தொடர்பாகஆராயவேஇச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டது. (ச-5)

## தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் பேச்சு நடத்த கூட்டமைப்பு தயார்


### சுரேஷ் எம்.பி அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் பேச்சு நடத்துவது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்த அழைப்பு விடுக்கப்டுமாயின் அதில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது எனவும் அக்கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று மாலை கொழும்பில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் போது சமகால அரசியல் நிலைவரம். உள்நாட்டில் (16ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதியின் இரண்டாம் பதவியேற்பை முன்னிட்டு நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்ட மரநடுகைத் திட்டத்தில் தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் நிகழ்ந்த விசேட நிகழ்வில் ஆசிரியையும் மாணவியும் இணைந்தும் மற்றும் பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன் மரம் நடுவதையும் நிகழ்வின்போது கலந்துகொண்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது - அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் தற்போதைய நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளதாகவும் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் அக்கறை செலுத்தினால் தமது கட்சி பூரண ஆதரவினை வழங்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து வரவேற்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் தற்போது கொண்டுள்ள நிலைப்பாட்டை ஏற்கனவே கொண்டிருந்தால் பாதிப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்கலாம்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உண்மையாகத் தீர்வுத்திட்டங்களை வழங்க முன்வந்தால் அதற்கு முழுமையான ஆதரவளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தெரிவித்துள்ளார். (ந-5)

# கிழக்கு மாகாணசபை வ.செ.திட்டம் நாளை

2011ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் முன்வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து நான்கு நாட்களுக்கு இடம் பெறவுள்ள வரவு செலவு திட்ட விவாதத்தில் ஆளுநருக்கான நிதியொதுக்கீடு, முதலமைச்சருக்கான நிதியொதுக்கீடு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

இம்முறைய வரவு செலவு திட்டத்தில் கிழக்கு மாகாண சபையின் உத்தேச வருமானமாக 1726 கோடியே 753 ஆயிரம் ரூபாயும், உத்தேச செலவாக 1349 கோடியே 27 லட்சத்து 53 ஆயிரம் ரூபாயும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மாகாண வீதி அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 117 கோடியே 50 லட்சமும் உலக அபிவிருத்தி வங்கி 86 கோடி 30 லட்சம் ரூபாயும் வழங்குமெனவும்,

ஜெய்கா திட்டத்தின் ஊடாக கிராம வீதி அபிவிருத்திக்காக 149 கோடி ரூபாயும் நீர் வழங்கல் திட்டத்திற்காக 24 கோடி ரூபாயும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கு மாகாண சபையின் 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெறும். (ந-5)

# உலக உணவுத் திட்டத்தின் நிவாரணப் பொருட்கள் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் நிவாரண விநியோகத்துக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்கள் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது.

மேற்படி கிராம மக்களுக்கான உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகத்துக்கான பொருட்கள் திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய கூட்டுறவுச் சங்கத்தினால் இரத்தினபுரம் முன்பள்ளிக் கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டது. இந்நிலையில் மக்களுக்கு வழங்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் அன்றிரவு களவாடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் இடம் பெற்ற தினத்தன்று அப்பகுதி கிராம அலுவலரின் அலுவலகமும் உடைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

# ஊரணி மற்றும் மயிலிட்டி மக்கள் அடிப்படை வசதிகளின்றி உள்ளனர்

## விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயங்களான ஊரணி, மயிலிட்டி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து இளவாலை சீந்திப்பந்தல் குடியிருப்பில் அடிப்படை வசதிகள் இன்றி இருக்கின்றனர். இவர்கள் சொந்த இடங்களில் மீள்குடி யேற்றப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.


இளவாலை சீந்திப்பந்தல் மக்களை கடந்த வெள்ளியன்று நேரில் சென்று சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். மேலும் இந்தப் பகுதியில் இடம்பெயர்ந்து வந்து குடியேறியவர்களுக்கு மட்டுமே கழிவறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்கள் கழிவறை வசதிகள் இன்றி சிரமப்படுகின்றனர்.

இப்பகுதியில் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு போதியளவு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவில்லை. அத்துடன் பல இளைஞர்கள் பல்கலைக்கழக பட்டப்படிப்பினை முடித்து விட்டு பல வருடங்களாக வேலையின்றி காணப்படுகின்றனர்.

முன்பள்ளிச் சிறார்கள் அமர்ந்து படிப்பதற்கு தளபாட வசதிகள்



ஒழுங்கு செய்து கொடுக்கப்படவில்லை. இவர்கள் நிலத்திலிருந்தே கல்வியைத் தொடர்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இச்சிறார்களின் அடிப்படைக் குறைகள் நீக்கப்பட வேண்டியது இன்றியமையாதது.

இம்மக்கள் கேட்கும் கோரிக்கைகள் முழுவதும் என்னால் நிறைவேற்ற முடியாது போனாலும் மாணவர்களின் கல்விக்காக என்னால் இயன்ற உதவிகளை செய்து கொடுப்பேன் என அவர் மேலும் கூறினார்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள மாரிசன்கூடல், றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கணனியையும் முன்பள்ளி மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் தளபாடங்களும் பெற்றுக்கொடுப்பேன் எனவும் அவர் உறுதி வழங்கியுள்ளார். (ச-2,6)

# புலிகளின் ஆதரவு மாநாட்டில் ஊடகவியலாளர் வெளியேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூஜேர்சி மாநிலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு மாநாடு ஒன்றிலிருந்து அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் க்லாநிதி பிரகாஷ் எம்.சுவாமி வெளியேற்றப்பட்டதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வாழ் இலங்கைத் தமிழர் சங்கம், உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த இம் மாநாட்டிலிருந்து பிரகாஷ் எம்.சுவாமி இந்திய, இலங்கை அரசாங்கங்களின் முகவர் எனக் கூறப்பட்டு மாநாடு நடைபெற்ற அரங்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

இவர் நாடுகடந்த தமிழீழ அரசு உருவாக்கம் குறித்து ஜூனியர் விகடன் உட்பட இந்தியாவின் பிரபல பத்திரிகைகளில் ஆக்கங்களை எழுதியிருந்தார்.

ஊடகவியலாளரின் பணிகளை செய்யவிடாமல் இடையூறு செய்தமை குறித்து நியூஜேர்ஸி மாநில ஆளுநர் கிறிஸ் கிறிஸ்டிக்கும் மாநில மனித உரிமை ஆணையாளருக்கும் முறைப்பாடு செய்ய தான் திட்டமிட்டுள்ளதாக சுவாமி கூறியுள்ளார். (ந-5)

# காணாமல் போன குடும்பஸ்தர் பற்றைக்குள் இருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

புலோலி வட மேற்கு குரும்பகட்டிப் பகுதியிலிருந்து கடந்த 18ஆம் திகதி காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார். மந்திகை கண்ணகை அம்மன் ஆலய பின் வீதியில் உள்ள பற்றைக்குள் இருந்து அல்லது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

காணாமல் போயிருந்த வடிவேல் செல்வரத்தினம் (வயது 48) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அருகில் இருந்து அவரது சைக்கிள் மற்றும் உடுப்புப் பொதி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. (ச-24)


## மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்படும் முன்னோடி நிகழ்வாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியானது எதிர்வரும் 01.12.2010 முதல் 05.12.2010 வரை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது.

பங்குபற்றும் கழகங்கள் கீழே குறிப்பிடப்படும் முகவரியுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்று 27.11.2010 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு :
நிரோஜன் தொலைத்தொடர்பு நிலையம்,
முள்ளியவளை.
T.P : 024 324 9231 / 0770878855
(சி-1657)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :-
0770452612
(3103)

செல்லா சினிமா (நாதன்ஸ்)






காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

## வீடு விற்பனைக்கு

இல.59 சீனிவாசகம் வீதியில் அமைந்திருக்கும் 2 1/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

(3101) தொடர்பு:- 0776146253

# இன்று ஒரு தகவல்

## புகைப் பழக்கம்

சிகரெட் பிடிக்கும் பழக்கமேயில்லாத ஒரு ஊருக்கு ஒரு சிகரெட் வியாபாரி வந்தார். வியாபாரம் பண்ணிப் பார்த்தார். யாரும் அந்த ஊரில் சிகரெட் வாங்கவில்லை.

இவர் என்ன பண்ணலாம் என்று யோசித்தார்.

உடனே சிகரெட்டின் பெருமைகளைப் பற்றி பிரசாரம் பண்ண ஆரம்பித்தார்.

எப்படித் தெரியுமா?

புகை பிடிப்பவன் எவனையும் நாய் கடிப்பதில்லை.

புகை பிடிப்பவனுக்கு பெண்குழந்தை பிறப்பதில்லை.

புகை பிடிப்பவனின் வீட்டுக்குத் திருடன் வரமாட்டான்.

புகை பிடிப்பவனை முதுமை நெருங்காது என்று சொல்லி பிரசாரம் செய்தார்.

சனங்களெல்லாம் பார்த்தார்கள். இதில் நிறைய பயன்கள் இருக்கிறது என்று நினைத்தார்கள்.

உடனே சிகரெட் வாங்க ஆரம்பித்தார்கள்.

வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

ஒருவருடமாகிவிட்டது.

புகையிலையின் மகிமை பற்றி அந்த வியாபாரி சொன்னது பொய் என்று ஒருத்தர் அனுபவத்தில் புரிந்துகொண்டார்.

உடனே வியாபாரியைத் தேடிக் கொண்டு போனார்.

“என்னையா நீ.... இந்த ஊர்ச் சனங்களை பொய் சொல்லி ஏமாற்றிவிட்டாயே” என்று கத்தினார்.

ஆனால் அந்த ஆள் கொஞ்சம் கூட அசந்து கொடுக்க வில்லை. நான் சொன்னது எதுவும் பொய்யில்லை என்று சாதித்தார்.

‘‘அது எப்படி? புகைபிடிப்பவனை நாய் கடிக்காதென்று சொன்னாயே அது பொய்தானே’’ என்றார்.

இதற்கு அந்த வியாபாரி விளக்கம் கொடுத்தார்.

‘‘அப்படியில்லை. புகைபிடிப்பவனின் உடம்பில் பலம் இருக்காது. தள்ளாடித் தள்ளாடித்தான் நடப்பான். அதனால் எப்பொழுதும் கையில் ஒரு ஊன்றுகோல் வைத்திருப்பான். கையில் தடியுடன் இருப்பவனைக் கண்டால் நாய் நெருங்காது. அதுதான் அப்படிச் சொன்னேன்’’ என்றார்.

‘‘பெண் குழந்தை பிறக்காது என்று சொன்னாயே அது எப்படி?’’ என்று கேட்டார் இவர்.

“உண்மையிலேயே அவனுக்கு எந்தக் குழந்தையுமே பிறக் காது. அதனால் பெண் குழந்தையும் பிறக்காது என்பது உண்மை தானே!’’ என்றார் அவர்.

“புகைபிடிப்பவனின் வீட்டுக்குத் திருடன் வரமாட்டான் என்று சொன்னாயே!’’ என்றார் இவர்.

‘‘ஆமாம்! புகைப்பிடிப்பவன் இரவு முழுவதும் இருமிக் கொண்டேயிருப்பான். அதனால் ஆள் முழித்துக் கொண்டிருக் கிறான் என்று நினைத்துத் திருடன் வரமாட்டான்’’ என்றார் இவர்.

‘‘எல்லாம் சரி! புகைபிடிப்பவன் முதுமை அடைவதில்லை என்று சொன்னாயே அது எப்படிச் சாத்தியம்?’’ என்றார் இவர்.

“முதுமை வருவதற்கு முன்பே அவன் இறந்துவிடுவான் சேர்! அதன்பின் எப்படி அவனை முதுமை நெருங்கும்?’’ என்று கேட்டார் அவர்.

நியாயம்தான் என்று சொல்லிவிட்டு இவர் திரும்பி வந்துவிட்டார்.

இந்தக் கதையிலிருந்து வியாபாரத் தந்திரமென்றால் என்னவென்பதையும் புகைப்பழக்கம் எவ்வளவு கெடுதல் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

சிகரெட் பிடிப்பவர்கள் எந்த நேரமும் அதை நிறுத்தலாம். பல வருடங்களாக புகைப்பழக்கமுள்ளவர் 70 வயதில் அதை கைவிட்டு விட்டார் என்றால் அவர் அதிக நாள் வாழ்வாராம்.

இவ்வளவுகாலம் பாவித்து விட்டோம். இனிமேல் நிறுத்தி என்ன பிரயோசனம்? என்று நினைக்கவேண்டியதில்லை.

அமெரிக்காவில் இதைப்பற்றி சோதனையெல்லாம் பண்ணிப் பார்த்திருக்கிறார்கள்.

‘ஏற்கனவே புகைப்பழக்கம் இருந்திருந்தால் வயதான காலத்தில் தீங்கு ஏற்படும் என்று நினைக்க வேண்டியதில்லை. எந்த நேரமும் அதைக் கைவிடலாம். எந்த நேரம் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டாலும் அதன்பின் நல்ல படியாக வாழலாம். இதுதான் நிபுணர்களின் கருத்து.’

அன்றைக்கு ஒரு சின்னப்பையன் கடைக்கு வந்தான்.

“2 சிகரெட் கொடுங்க’’என்றான்.

‘‘இவ்வளவு சின்னப்பையனாக இருக்கிறாய். இந்த வயதிலேயே உனக்கு அந்தப் பழக்கம் வரலாமா?’’ என்று கேட் டார் கடைக்காரர்.

‘‘எனக்கெல்லாம் அந்தப்பழக்கம் கிடையாது’’ என்றான் பையன்.

“பின்ன இது யாருக்கு?’’என்று கேட்டார் அவர்.

“என் தம்பிக்கு சேர்” என்றான் அந்தப் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 40 வருடங்களாக வசித்த காணிகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் உள்ள மணற்காடு, பள்ளிக்குடா, கடற் கரைப்பிட்டி ஆகிய கிராமங்களில் 40 வருடத்திற்கு மேலாக தொடர்ச் சியாக குடியிருந்த குடியிருப்பாளர் கள் உடனடியாக காணிகளை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் கல் வீடுகளை அமைத்து நிரந்தரமாக இக்காணி களில் குடியிருந்தவர்களாவர்.

இவர்கள் குடியிருந்த இக் காணிகள் உறுதி, தமக்குச் சொந் தமான தெனக்கூறி உரிய காணி ஆவண ங்கள் அனைத்துடனும் வந்த முஸ்லிம் குடும்பத்தவர்கள் இவர்களை வெளியேறி அந்தக் காணிகளை தமக்கு ஒப்படைக்க வேண்டும் என கிராம சேவகர் களிடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

இதேவேளை பழைய குடியி ருப்பாளர்கள் தமக்கு இது சம் பந்தமாக நீதியான முடிவு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத் துள்ளனர்.

பழைய குடியிருப்பாளர்களி டம் காணி சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்பது குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு சங்கங்களுக்குமான கலந்துரையாடல் நாளை செவ் வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்த வநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் , பனை, தென்னைவள அபிவிரு த்தி கூட்டுறவுச் சங்கங்கள் , கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் கள் , கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற் றின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*22.11.2010*
*(கார்த்திகை 6, திங்கட்கிழமை)*
*பிரதமை முன்னிரவு 11.48 மணி வரை*
*கார்த்திகை முற்பகல் 9.04 மணி வரை*
*இராகுகாலம் 7.40-9.10 மணி வரை*
*சுபநேரம் 12.10-1.40 மணி வரை*
*விஷ்ணு ஆலய தீபம்,*
*விநாயக விரதாரம்பம்,*
*முதலாம் கார்த்திகை சோமவாரம்.*

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்து மாக செயற்படுவீர்கள், குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**இடபம்** எந்தவொரு வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும், பணத்தேவைகள் இறுதி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** பயணத்தால் பலன் கிடைக்கும், நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிட லாம், உங்களிடம் வேறுயாரும் உதவி கேட்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகள் தாராளமாக இருக்கும், உறவினர்கள் வருகையால் உற்சாகப்படுவீர்கள்.

**சிங்கம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள், புதிய தொழில் தொடங்க போட்ட திட்டங்கள் நிறைவேறும், எதிர்பார்த்து செய்த காரியமொன்றில் பெரிய இலாபம் கிடைக்கலாம்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிட்டும் நாள், தேடிச் சென்றவர்கள் உங்களை நாடி வந்து உதவுவர், வியாபார விருத்தி ஏற்படும், தந்தைவழியில் தனலாபம் உண்டு.

**துலாம்** குடும்ப உறுப்பினர்களிடையே விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது, பிரயாணத்தில் கூடிய கவனம் தேவை, வரவும், செலவும் சமனாகும், மனச் சோர்வுண்டு.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு பிறர் உதவி கிடைக்கும், கௌரவ மான நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**மகரம்** மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகளின் வழியில் பெருமைகள் வந்து சேரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மை கிடைக்கும், அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், தொலை பேசித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து செயற்படுவர், தடைப்பட்ட காரியம் கை கூடும்.

வளவன்

# இந்திய நிதியுதவியுடன் புகையிரத புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா புகையிரத புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ள இருக்கும் ஓமந்தை தொடக்கம் பளை வரையிலான புகையிரத பாதை மற்றும் மதவாச்சி தொடக்கம் தலைமன்னார் வரையி லான புகையிரத பாதைகளின் பணிகளே ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் அவர், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் இந்திய உயர்ஸ்தானிகரின் இரு கிளை நிலையங்களை திறந்து வைக்க உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி 3 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள தாண்டிக்குளம் வரையிலேயே புகையிரத பாதைகள் சீரமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு ள்ளது.

இதுதவிர, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான உத்தேச ஆயிரம் வீடுகளைக் கொண்ட தொகுதி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு அரசாங்கங்களுக்கும் இடையியே கைச்சாத்தாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 50 | 70 | 40 |
| பூசணி | 50 | 70 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 130 |
| பாகற்காய் | 120 | 140 | - |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 70 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 140 | 110 |
| முருங்கைக்காய் | 200 | 200 | .120 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 30 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30-50 |

# துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்வோரை கைது செய்ய வேண்டாம்

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்யும் நபர்களை கைது செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரசியல் மற்றும் ஏனைய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்யும் நபர்களை கைதுசெய்ய வேண்டாம் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் துண்டுப் பிரசுர விநியோகத்தின் மூலம் சுற்றாடலுக்குத் தீங்கு ஏற்பட்டால் அவ்வாறு செயற்படுவோரை சுற்றாடல் சட்டங்களின் அடிப்படையில் கைது செய்யுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்யும் நபர்களை கைது செய்யப்படுவதாக ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# கட்டாரில் வாகன விபத்து; இலங்கையர்கள் மூவர் பலி

(கொழும்பு)

கட்டாரில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று இலங்கையர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் விரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த தம்பதியரும் மற்றுமொரு நபரும் இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்படுகிறது.

மோட்டார் காரின் பின் ஆசனத்தில் பயணித்தவர்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணமொன்றை மேற்கொண்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும் இக்காரில் பயணித்த மற்றுமொரு பெண்ணும் இச் சம்பவத்தின் போது காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு-2010 சோதனைக்குழாய் குழந்தையின் பிதாமகன்



ரொபர்ட் எட்வர்ட்ஸ், உலகின் முதல் சோதனைக்குழாய் குழந்தையான லூயிஸ் பிரவுன் (குழந்தையை வைத்திருப்பவர்) உலகின் முதல் சோதனைக் குழாய் குழந்தையின் தாய் லெஸ்லி பிரவுன்.(வயதானவர்)

பிரிட்டிஷ் மருத்துவ விஞ்ஞானி ரொபர்ட் எட்வர்ட்ஸ் 2010 ஆம் ஆண்டுக்கான மருத்துவத்திற்கான நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சோதனைக்குழாய் மூலம் குழந்தைகளை பிறக்கச் செய்யும் முறையை மேம்படுத்தியதற்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. விஞ்ஞானி ரொபர்ட் எட்வர்ட்ஸின் முயற்சியால் 1978 ஜூலை 25 இல் பிரிட்டனில் முதல் முறையாக சோதனைக் குழாய் குழந்தை பிறந்தது.

1950 ஆம் ஆண்டுகளுக்கு முன் கருப்பைக்கு வெளியே கருவை உருவாக்கி பின்னர் கருப்பைக்குள் செலுத்தும் முறை இருந்தது இதை ரொபர்ட் எட்வர்ட்ஸ், பேட்ரிக் ஸ்டீப்போ என்ற சக விஞ்ஞானியுடன் சேர்ந்து மேம்படுத்தினார்.


அவரது இந்த சிகிச்சை முறைக்கு இன்விட்ரோ ஃபெட்டிலைசேஸன் (ஐவிஎஃப்) என்று பெயர் . ரொபாட்ஸின் பங்களிப்பால் உலகம் முழுவதும் குழந்தைப் பாக்கியம் இல்லாத இலட்சக் கணக்கான தம்பதிகள் குழந்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் சுமார் 40 இலட்சம் குழந்தைகள் சோதனைக் குழாய் மூலம் பிறந்துள்ளனர். அவரது முயற்சி நவீன மருத்துவ உலகில் ஒரு மைல்கல் ஆகும்.

ரொபர்ட் ஜி.எட்வர்ட்ஸ் 1925இல் பிரிட்டனின் மான்செஸ்டர் நகரில் பிறந்தார். இராணுவத்தில் பணியாற்றிய அவர் 2ஆம் உலகப் போர் முடிவடைந்த பின்னர், வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து உயிரியல் படித்தார். தொடர்ந்து ஸ்கொட்லாந்தில் எடின்பெர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.1955 இல் பி.எச்.டி. படிப்பை நிறைவு செய்தார். தொடர்ந்து 1958 முதல் லண்டன் தேசிய மருத்துவ ஆய்வுக் கழகத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றினார். 1963ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்து அங்கு பல மருத்துவ ஆய்வுகளை மேற் கொண்டார்.

இங்குதான் தனது இன்விட்ரோஃ பெர்டிலைசேஸன் (ஐவி. எஃப்) சோதனைக்குழாய் குழந்தை) ஆய்வை மேற் கொண்டார். அங்கு உலகின் முதல் ஐவிஎஃப் ஆய்வு மையமும் அமைக்கப்பட்டது. அங்கு உலகின் முதல் ஐ.வி. எஃப் ஆய்வு மையம் அமைக்கப்பட்டது. அங்கு சக விஞ்ஞானி பேட்ரிக் ஸ்டீப் போவுடன் இணைந்து சோதனை குழாய் குழந்தை ஆய்வை வெற்றி கரமாக நிறைவு செய்தார். இப்போது 85 வயதான நிலையிலும் கேம் பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்தச் சோதனை குழாய் மூலம் குழந்தைகளை உருவாக்கும் முறை முதலில் விலங்குகளிட்ம் சோதனை செய்யப்பட்டது. (எகா) சுடல் வாழ் உயிரிணங்கள். வார்செஸ்டர் அமைப்பைச் சேர்ந்த பிரகரி பின்சா என்ற அமெரிக்க விஞ்ஞானி 1935ஆம் ஆண்டுமுதல் முதலாக முயல்களை வைத்து இந்த ஆய்வை மேற்கொண்டுமின் ஷீ சாங் என்ற மற்றொரு விஞ்ஞானி 1959 ஆம்ஆண்டு இந்தச் சோதனையை உறுதி செய்தார். 20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் மறு உருவாக்கலைப் பற்றி ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள் இதை மனிதர்கள் வாயிலாகப் பரிசோதனை செய்ய ஏற்ற சூழ்நிலை குறித்து விவாதித்தனர். இதன்காரணமாக 1960 வரை இந்த சோதனைக்குழாய் குழந்தை முறை அங்கீகரிக்கப்படவில்லை. இதற்கு நிறைய தொழில்நுட்ப வசதிகளும் அதற்குரிய ஆராய்ச்சிக்கூடங்களும் தேவைப்பட்டன. பின்னர் சோதனை முறையில் கருமுட்டைகள் தாயின் கருப்பையில் சேர்க்கப்பட்டன. 1950 களில் இலண்டனில் உள்ள நஷனல் மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் பணிபுரிந்த எட்வேர்ட்ஸ் இந்தத் துறையில் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தியவர்.

தனது முதல் சோதனையை அவர் 1965இல் வெற்றிகரமாக செய்துமுடித்தார். அவரது அடுத்த கட்ட முயற்சி மிகவும் சவலானது .பெண்ணின் கருப்பையில் விந்தணுக்கள் செலுத்தப்பட்டால் அவை நீண்டநாட்கள் தங்குமா என்பது பல் வேறுகட்ட ஆராய்ச்சிகளின் முடிவில் 1969 ஆம் ஆண்டு இதில் வெற்றிகண்டார். டாக்டர் எட்வர்ட்ஸ் மனித அணுக்கள் விட்ரோவினுள் செலுத்தப்பட்டதும் அவை 2-செல்ஸ்டேஜில் சேரவில்லை. இந்த தோல்வியினால் விட்ரோ அணுக்கள் உடம்பின் வெளிப்பகுதியில் வைத்து சோதனை செய்யப்பட்டது. இந்தப் புதிய முயற்சிமூலம் ஓரளவிற்கு வெற்றி கிடைத்தது.இதில் *நிரூபிக்கப்பட்டது என்னவென்றால் கோனாடிராபின்ஸ் (Gonotrophins) மூலம் ஒக்டஸ் கட்டுப்




படுத்தப்படும்.

மேலும் விட் ரோவில் இதைச் செயற்படுத்த நீண்ட காலமா னது. எனினும் டாக்டர் எட்வர்ட்ஸ் அவர் இந்த ஆய்வின் போது புதிய தொழில்நுட்ப ரீதியான பிரச்சினையை சந்தித்தார். அவரது புதிய ஆய்வின்படி மனித உடலினுள் ஒக்டஸை செலுத் தினால் குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல் அது பயனளிக்கவில்லை. இங்கு தான் டாக்டர் பேட்ரிக் சி.ஸ்டெப் போஸின் முறை பயனளித்தது.பின்னர் இங்கிலாந்திலேயே லேப்ரஸ்கோப் முறையை உருவாக் கினார்.அதன்மூலம் ஓவரிலிருந்து (Ovary) ஒக்டோசை செலுத்தினார். லேப்ராஸ்கோப் முறை யில் கருவுற்ற பெண்களுக்கு வயிற்றின் அடிப் பகுதியில் என்டாஸ்கோப் என்னும் நவீன மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. உடனே டாக்டர் எட்வர்ட்ஸ் இந்த முறை எல்லோருக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளது. மேலும் இதன் வாயிலாக மீயாசீஸ் ஒவை ஓவரியிலிந்து கோனாடிராபின்ஸில் இணைக்க லாம் என முடிவு செய்தார்.

எட்வர்ட்ஸின் இரண்டாம் கட்ட ஆய்வில் இதுவே இறுதியான கண்டுபிடிப்பு ஆகும். முதல் கட்ட ஆய்வில் விட்ரோ முறையில் செலுத்தப்பட்ட விந்துக்கள் எப்பிரயோ முறை மூலம் 2 செல்ஸ்டேஜஜுடன் ஒத்து போனது. இதை தொடர்ந்து 1971 இல் மனித ஒக்டோஸை விட்ரோவுடன் செலுத்தி 16 செல் என்னும் முறையில் பிளாஸ்டோசைட்டை உருவாகச் செய்தார். இந்த ஆராய்ச்சியானது 1969-71 ஆராய்ச் சியில் ஒரு மைல் கல்லாகும். இது எட்வர்ட்ஸ் அடுத்த கட்ட ஆய்வுக்கு தயாராக அது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. 1970 இல் சக விஞ்ஞானி பேட்ரிக் ஸ்டிப் போவுடன் இணைந்து (சோதனை குழாய் குழந்தை) ஆய்வை மேற் கொண்டார்.

இறுதியாக ஹோர்மோன் சிகிச்சையில் சில மாறுதல்கள் செய்ததன் மூலம் கருத்தரிப்பு முறை 1976 ஆம் ஆண்டு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது. பல்வேறு ஆய்வு மற்றும் சோதனைகளுக்கு பின்னர் 1978 ஆம் ஆண்டு முதல் சோதனை குழாய் குழந்தை லூயிஸ் ஜோய் பிரவுன் பிறந்ததாக எட்வர்ட்சும், பேட்ரிக்கும் அறிவித்தனர்.

இந்தக் குழந்தை நல்ல உடல் எடை மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் பிறந்ததாகவும் அவர்கள் கூறினார். அவர்கள் தெரிவித்த லூயிஸ் ஜாய் பிரவுன் போல சோதனைக் குழாய் மூலம் பிறந்த இலட்சக்கணக்கான குழந்தைகள் இன்று நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளனர்.


கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் பகுதித் தலைவர் திருமதி கமலாதேவி கோபால கிருஷ்ணன் உரையாற்றுவதையும் மேடையில் கனடாவிலுள்ள கைதடி பாடசாலைகள் அபிவிருத்திச்சங்கத் தலைவர் செந்தில்குமார் வேலாயுதர், பாடசாலை நிறுவுநரின் பேரனும் கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களுமான குருசாமிக்குருக்கள், பாடசாலை முதல்வர் சி.பவளகாந்தன்,தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இரண்டாம் நாள் நிகழ்வில் பாடசாலை நூற்றாண்டு விழா மலரை சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வெளியிட்டுவைக்க செ.வேலாயுதர் பெறுவதையும் பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# குழந்தைகளும் கனவு காண்கின்றனர்; விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

புதிதாக பிறந்த குழந்தைகளும் கனவு காணும் என பிரிட்டன் விஞ்ஞானிகள் கண் டறிந்துள்ளனர். மனித மூளையில் ஞாபக சக்திக்கென தனிப்பிரிவுள்ளது. நியூரோன் கள் மூலம் இணைக்கப்பட்டுள்ள இப்பகுதியின் உதவியில்தான் நடந்தவற்றையும் எதிர் காலம் பற்றியும் காட்சி வடிவங்களில் நாம் நினைத்துப் பார்க்க முடிகிறது. ஞாபக சக்திக்கு மூளைகளில் உள்ள நியூரோன்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

புதிதாக பிறந்த குழந்தைகளில் மூளை வளர்ச்சி இல்லை. குழந்தைகளுக்கு நினை வாற்றல் கிடையாது கனவு வராது என விஞ் ஞானிகள் கூறிவந்தனர்.

இதுபற்றி லண்டன் இம்பிரியல் காலே ஜில் உள்ள எம். ஆர்.சி.கிளினிகல் சென்டர் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர். இதற்காக பிறந்து எட்டு மாதம் முதல் 12 மாதங்கள் வரை யுள்ள குழந்தைகள் ஆய்வில் ஈடுபடுத்தப்பட் டனர்.

ஆய்வுக் குழுவின் தலைவர் டேவிட் எட் வர்ட்ஸ் இது குறித்து கூறியதாவது, வயது வந்த மனிதனின் மூளை போன்று குழந்தை களின் மூளையும் நன்கு வளர்ச்சி அடைந் துள் ளது. கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றி யும் குழந்தைகள் கனவு காண்கின்றனர். மூளையில் உள்ள நியூரோன்கள் அனைத் தும் நல்ல முறையில் இயங்குவதால் நடந்து முடிந்த சம்பவங்களை காட்சி வடிவில் நினை வில் வைத்துக்கொள்கின்றனர்.

குழந்தைகளுக்கும் பகல் கனவு ஏற்படு கிறது. ஏதாவது ஒரு செயலில் ஈடுபட்டிருக்கும் போது குழந்தைகளின் ஞாபக சக்தி மையம் மெதுவாகவும் தூங்கும் சமயங்களில் அதிக அளவிலும் இயங்குகிறது. இவ்வாறு டேவிட் எட் வர்ட்ஸ்கூறினார்.

(ஸ்ரீ)

# திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு உதவிப் பொருட்கள் கையளிப்பு

டென்மார்க்கிலுள்ள சிறுவர் காப்பகத்தின் ஏற்பாட்டில் திருவையாறு மகாவித்தியாலயத் திற்கு உதவிப்பொருட்கள் பெற்றுக்கொடுக் கப்பட்டுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஏற்பாட்டில் இந்த உதவிப்பொருட்கள் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளன. இதன் போது வாழ்வாதார நிலை யில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள, போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்கள் 5 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.



மேலும் பாடசாலையின் உபயோகத்திற் கென வழங்கப்பட்ட போட்டோ பிரதி இயந்தி ரத்தை பாடசாலையின் அதிபர் நா.மதுரநாய கம் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் திருவை யாறு மேற்குகிராம அபிவிருத்திச் சங்கத்திற் கான நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட் டது. இதனை கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் சு.கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார். (ஸ்ரீ-2)

# பாராட்டி வாழ்த்துகிறோம்




## திரு.வே.பாலசுப்பிரமணியம்

(B.A(Hons),Dip in ED,PGDEM,MED,SLPS-I)

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிபர் தரத்தில் இருந்து கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பண்புடனே மத்திய கல்லூரியில் தடம் பதித்து,
விண்ணுயர பாடுகள் பல தான் பட்டு,
தண்டமிழும் கவின் கலையும் விளையாட்டும்
தாண்டவமாட புகழ் சேர்த்தோன்,
அறிவொடு பொறுமை நிறை அக ஒளியேற்று
அதிபராய் கோப்பாய் கோட்டத்து,
அதிகாரியாய் உயர்வு பெற்று விண்மேவு,
அனைத்துப் பதவிகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(3104)

# இலங்கையில் பூரண மதச்சுதந்திரம் கிடையாது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் பூரண மதச்சுதந்திரம் கிடையாதென அமெரிக்கா குற்றம் சுமத்தி யுள்ளது.

மதச்சுதந்திரம் முழுமையாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளதென அரசாங்கம் பகிரங்க மாக பிரசாரம் செய்த போதிலும் உண்மையில் நிலைமை அதுவல்ல என அமெரிக்காவின் மதச் சுதந்திரம் குறித்த வருடாந்த அறிக் கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் சரத் பொன் சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி மஹா சங்கத்தினர் நடத்தத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு அச்சுறுத்தல் விடுக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து 500 ஆண்டுகள் பௌத்த மத வரலாற்றில் மிகவும் சில சந்தர்ப்பங்க ளில் மட்டுமே மஹாசங்க அமர்வுகள் நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# சவுதி அரேபியாவில் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கத் திட்டம்

(ஜெட்டா)


சவுதி அரேபியாவில் பெண்களுக்கும் படிப் படியாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வரு கிறது. வளைகுடா நாடான சவுதி அரேபியா வில் பெண்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் உண்டு. ஆண் துணையின்றி பெண்கள் வெளியே வரக்கூடாது. பர்தா அணிந்துதான் வரவேண்டும். பெண்கள் கார் ஓட்டக்கூடாது உள்ளிட்ட ஏராளமான கட்டுப்பாடுகள் உண்டு.

மேலும் இருபாலினத்தவரும் ஒரே இடத் தில் பணியாற்றக்கூடாது என்று அந்நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அங்கு பாத்வா உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள் ளது.

எனினும் இந்த உத்தரவுக்கு ஏற்ப பெண் களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அந்நாட் டில் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

படிப்படியாக பெண்கள் இருக்க வேண்டிய இடங்களில் பெண்களை அந்நாட்டு அரசு வேலைக்கு அமர்த்த அனுமதி அளித்துள் ளது. இதற்கு பெண்கள் மத்தியில் வரவேற்பு இருந்தாலும் ஒரு சாரார் இதற்கு எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர். (ஸ்ரீ)





யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

## ஜோர்தானில் சித்திரவதைக்குள்ளான பணிப்பெண் நாடு திரும்பியுள்ளார்

(கொழும்பு)

ஜோர்தானில் பல தரப்பட்ட சித்திரவதைகளுக்கு முகம் கொடுத்த பொலனறுவை மன்னம் பிட்டியவைச் சேர்ந்த டி.எம்.ஷாந்தினி நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

மேலதிக சிகிச்சைகளுக்காக இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்ற இவர் தொழில் தருனரால் பல தரப்பட்ட சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

செய்திகளை அறிந்த வெளிநாட்டு வேலைப்பணியக அதிகாரிகள் குறித்த பெண்ணை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஷாந்தினி தனக்கேற்பட்ட நோவை கட்டுப்படுத்த மருந்தொன்றை கோரிய போது ஜோர்தானின் தொழில் தருநர் இவருக்கு ஆணிகளை கலந்த நீரை பருகக்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தோனேஷிய பணிப் பெண் ஒருவர் சவுதி அரேபியாவில் வைத்து மர்மமான முறையில் மரணித்தமை குறித்து விசேட விசாரணைகளை மேற்கொண் டுள்ளதாக ஜனாதிபதி சுசுலோ பம்பன் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த பணிப் பெண் ஒருவர் ஏற்கனவே கடந்த 2009ஆம் ஆண்டு யூன் மாதம் பல்வேறு நெருக்கடிக்கு முகம் கொடுத்து மர்மமான நிலையில் மரணித்தார்.

அதேபோன்று அண்மை யில் மரணித்த 23 வயதான பெண் கத்திரிகோல்களால் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே மரணித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு பெண்களின் மரணங்கள் தொடர்பிலும் தீவிர விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என இந்தோனேசியா சவுதி அரேபிய அரசாங்கத்தை கோரியுள்ளது.

(ஸ்ரீ-2)

## மாலைதீவு ஜனாதிபதி திடீரென தாயகம் பயணம்

(கொழும்பு)

தனது மனைவியின் தந்தையார் உயிரிழந்ததையடுத்து இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மத் நஷீட் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை சுருக்கிக் கொண்டு மீண்டும் தாயகம் திரும்பியுள்ளார்.

மாலைதீவின் முதற்பெண்மணியின் தந்தை லைலா அலி அலி அப்துல்லா இந்திராகாந்தி ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்ததாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது தவணைக்கால பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளும் முகமாகவே மாலைதீவு ஜனாதிபதி இலங்கைகக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## தெருநாய் ஒன்றுக்கு அடித்த இராஜயோகம்

(கொழும்பு)

கொழும்பு வீதிகளில் மிகவும் கேவலமான நிலையில் திரிந்து வந்த மூன்று கால்களை மாத்திரம் உடைய தெருநாய் ஒன்றுக்கு இராஜயோகம் அடித்திருக்கின்றது.

அமெரிக்காவை சேர்ந்த பெண் வர்த்தகர்களில் ஒருவரான ரேஸி மேர்பி மிருகங்கள் மீது மிகுந்த காருண்யம் உடையவர்.

இவரின் வாழ்நாளில் பெரும் பகுதியை மிருகங்களுக்கு உதவி செய்வதிலேயே செலவளித்துள்ளார். சில வாரங்களுக்கு முன் வர்த்தக விடயமாக கொழும்பு வந்த அவர் தெருவில் மூன்று கால்களை உடைய நாயொன்றைக் கண்டு இருக்கின்றார். இதன் வயிறு ஒட்டிப் போய் இருந்தது. மிகவும் கேவலமான நிலையில் காட்சி தந்தது.

இந்நாய் உயிரோடு இருப்பதே அதிசயமாகப்பட்டது. ரேசியின் மனம் இளகி விட்டது. நாய்க்கு பாதுகாவலராக மாறி விட்டார். நாய்க்கு டிங்கோ என்று பெயர் சூட்டி உள்ளார்.

இந் நாயை அமெரிக்கா கொண்டு சென்று பராமரிக்க விரும்புகின்றார். இதற்கு 2500 அமெரிக்க டொலர் வரை தேவை. இணையத்தள பிரசாரம் மூலம் தேவையான பணத்தை திரட்டி வருகின்றார்.

இவரது பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களுக்கு இடையில் 1000 அமெரிக்க டொலர் வரை கிடைத்துள்ளது. இதே வேகத்தில் ஆதரவு தொடர்ந்தால் அடுத்த மாதம் டிங்கோவை அமெரிக்கா கொண்டு செல்ல முடியும் என்கிறார். (ஸ்ரீ-2)

## புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட நிலையில்!

## மிடுக்குடன் நடந்து கொள்ளும் சிங்களவர்கள்; எதிர்த்து நிற்க திராணியற்றவர்களாக தமிழர்கள்

### -த எக்கொனமிஸ்ட் சஞ்சிகை விமர்சனம்

(கொழும்பு)

தங்களது இலக்கினை அடைவதற்காக கடுமையான போராட்டம் நடத்திய புலிகளமைப்பு இல்லாதொழிக்கப்பட்டு விட்ட நிலையில் சிறுபான்மைத் தமிழர்களுடன் சமரசத்துடன் வாழ வேண்டும் என்ற எந்த எண்ணமும் இல்லாது இலங்கையில் பெரும்பான்மை சிங்களவர்கள் மிடுக்குடன் நடந்து கொள்கிறார்கள் என பிரித்தானியாவிலிருந்து வெளிவரும், த எக்கொனமிஸ்ட் சஞ்சிகை விமர்சித்துள்ளது.

இச் சஞ்சிகையில் மஹிந்தவின் இரண்டாவது பதவியேற்பு குறித்து வெளிவந்த செய்தி விமர்சனத்தின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

தங்களது இலக்கினை அடைவதற்காக கடுமையான வழிமுறைகளைக் கூட கைக்கொண்ட புலிகளமைப்பு இல்லாதொழிக்கப்பட்டு விட்ட நிலையில் சிறுபான்மைத் தமிழர்களுடன் சமரசத்துடன் வாழ வேண்டும் என்ற எந்த எண்ணமும் இல்லாது நாட்டினது பெரும்பான்மைச் சிங்களவர்கள் மிடுக்குடன் நடந்து கொள்கிறார்கள்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்த அரசாங்கம் தற்போது தனது மன நிலையினை முற்றிலும் மாற்றி விட்டது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவத்தினரின் துணையுடன் சிங்களப் பெரும்பான்மையினரைக் குடியமர்த்தும் முனைப்புகளில் அது முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

இந்த அராஜகத்தை எதிர்த்து நிற்பதற்கு திராணியற்றவர்களாக அல்லது அஞ்சுபவர்களாகவே தமிழர்கள் காணப்படுகின்றனர்.

போரின் இறுதிநாட்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்களை இராணுவத்தினர் கொன்று குவித்தனர் என எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான அழுத்தத்தினை நாட்டினது தமிழர்களோ அன்றி ஐக்கிய நாடுகள் சபையினரோ பிரயோகிக்கும் நிலையில் இல்லை.

இவ்வாறாக பொதுமக்களும் புலிகளின் உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் காணொளி ஆதாரங்களை அண்மையில் *அல் ஜசீரா* தொலைக்காட்சி ஒளிபரப்பியிருந்தது. வழமை போலவே இந்த ஆதாரங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனக் கூறி இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது என்றுள்ளது.

(ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி பாலசிங்கம் பிரதீபா

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)

எமது பாடசாலை ஆசிரியை செல்வி பாலசிங்கம் பிரதீபா 16.11.2010 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் HNDAபட்டம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(2900)



வாழ்வக நிறுவனத்தில் உள்ள சிறார்களுக்காக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடாத்திய தேசிய மொழிப் பயிற்சி கலந்துரையாடல் நேற்று முன்தினம் வாழ்வகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வாழ்வக தலைவர் ரவீந்திரன் மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சிநெறி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஆர்.ஹேரத் மற்றும் வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சமூகத்தில் நற்பிரஜைகளாக திகழ்வதற்கு விளையாட்டுக் கழகங்கள் வழிவகுக்கின்றன

## கரவெட்டி பிரதேச செயலர் தெரிவிப்பு



(கரவெட்டி)

சமூகத்தில்இளைஞர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் விளையாட்டுக் கழகங்கள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. இவ்வாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த ஹாட்லிக் கல்லூரி மருத்துவப் பிரிவு மாணவர்களான சிவசோத்மன் உட்பட நான்கு மாணவர்களின் 11ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தினால் கடந்த 17 ஆம் திகதி நடத்தப்பட்ட சிவசோத்மன் கிரிக்கெட் வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமூகத்தில் இளைஞர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் விளையாட்டுக் கழகங்கள் முன்னு தாரணமாகத் திகழ்கின்றன. சிவசோத்மன் போன்ற மாணவர்கள் இன்று எம்முடன் இருந்திருந்தால் எமது சமூகத்தில் ஒரு மருத்துவர்களாகவும் சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் திகழ்ந்திருப்பர்.

ஆனால் அவர்களை கடலன்னை தன்னுடன் அணைத்துக் கொண்டமையால் அவர்களுடைய திறமைகளை எம்மால் காண முடியாமல் போய்விட்டது.

விளையாட்டால் சிறந்து விளங்கும் வீர வீராங்கனைகள் சமூகத்தில் நல்ல பிரஜைகளாக உயர் பதவிகள் வகிப்பார்கள் என்பதில் எதுவிதமான ஐயப்பாடும் இல்லை.

விளையாட்டின் மூலம் பெறப்படும் சிறந்த தலைமைத்துவ ஆளுமை, வெற்றி, தோல்விகளை சமமாக ஏற்றல், பொறுப்புணர்வு மற்றும் அனுபவங்களே மாணவர்கள் மத்தியில் சிறந்த நற்பண்புகளை வளர்க்கின்றது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-24)

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு கியூடெக் நிறுவனம் உதவி

(கொழும்புத்துறை)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து கடந்த 15 வருடங்களின் பின்னர் தமது சொந்தக் கிராமமாகிய அரியாலை நாவலடிப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு கியூடெக் -கரித்தாஸ் நிறுவனம் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், தூர்ந்துபோன நிலையில் காணப்பட்ட கிணறு ஒன்றை முப்பதுக்கும் அதிகமான குடும்பங்களின் நன்மை கருதி அந் நிறுவனம் புதிதாக அமைத்துக் கொடுத்துள்ளது. (ஸ்ரீ-51)




## புதிய நிர்வாகசபைத் தெரிவு

(கரவெட்டி)

கடந்த 10 வருடங்களாக இயங்காதிருந்த அல்வாய் இளைஞர் சனசமூக நிலையம் அப்பகுதி மக்கள் மற்றும் இளைஞர்களின் முயற்சியால் இயங்கஆரம்பித்துள்ளது:

நேற்று முன்தினம் அல்வாய் சின்னத் தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற இதன் வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக செ.மேனகன், செயலாளராக க.ரதீஸ்ஷன், பொருளாளராக பி.சந்திரபாபு, உபதலைவராக ச.தர்ஷன், உபசெயலாளராக கு.ராகுலன், சனசமூக நிலைய நிர்வாக ஆலோசனை குழுத் தலைவராக க.சுந்தரலிங்கம் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக நான்கு பேரும் ஒரு நூலகரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-24)

## மின்சார வசதியின்மையால் — மக்கள் பெரும் சிரமம் —

(கொழும்புத்துறை)

கொடிகாமம் தவசிக்குளம் நாச்சிமார் கோவில் பகுதிகளில் மின்சார வசதி இன்மையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ் இடத்தில் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்சாரத்திற்காக விண்ணப்பித்திருந்தும் மின்சார வசதி கிடைக்கப் பெறவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-51)

## வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கல்

(கொழும்புத்துறை)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட பதிவுகள் பரீட்சைகள் அலகில் கலைமாணி, வணிகமாணி, இசைமாணி, நடனமாணி ஆகிய கற்கை நெறிகளில் சித்தியடைந்த வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கற்கைநெறிகளில் சித்தியடைந்தவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-51)

## பசு மாடுகள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் பசுமாடுகள் காணாமல் போவதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் மக்கள் முறைப் பாடு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மாடுகள் காணாமல் போவதால் பண்ணை வளர்ப்பாளர்கள் அதிருப்தியடைந்து வருகின்றனர்.

இதேவேளை கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த ஒருவரின் பசுமாட்டை தலையில் அடித்துக் கொலை செய்ய முற்பட்டு மாட்டை இறைச்சியாக்க முயன்ற சிலரை அப்பகுதி மக்கள் விரட்டியடித்து அப்பகுதி பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.பொலிஸார் அவர்களை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஸ்ரீ-51)

## அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் கிராம மக்கள்

(கொழும்புத்துறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறுகின்றனர்.

இக்கிராமத்திலுள்ள வீதிகள் பாரிய சேதமடைந்து காணப்படுவதுடன் குடிதண்ணீர் பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் இப்பகுதி மக்களுக்கு இதுவரை மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்பட்ட நிலத்தடி குழாய் நீரும் தற்போது தடைப்பட்டுள்ளதுடன் சில விசமிகளால் நீர் வரும் குழாய் உடைக்கப்பட்டுள்ளது.

இதனால் இக் கிராமத்தில் குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதற்கும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-51)

## ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றோருக்கு சான்றிதழ்

(கொழும்புத்துறை)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற ஆரம்பிரிவைச் சேர்ந்த 95ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி செயலமர்வு தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம்பெற்றன.

இச் செயலமர்வின் இறுதிநாளான கடந்த 19ஆம்திகதி யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றநிகழ்வில் மேற்படி 95 ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-51)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு வினாடிவினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு ஆறுமுகநாவலரைப் பற்றிய வினாடி வினாப் போட்டியை மாணவர்கள் மத்தியில் நடத்தவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 11, 12,13இல் கற்கும் மாணவர்கள் பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை எழுதி பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சைவப்புலவர், செ.கந்தசத்தியதாசன், கௌரவ செயலாளர், இல.153 கே.கே.எஸ்.வீதி,கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கார்த்திகை மாத இராசிபலன்கள்

## 17.11.2010 முதல் 15.12.2010 வரை




(மிருகசீரிடம் 3,4ஆம் பாதங்கள்,திருவாதிரை,புனர்பூசம்,1,2,3ஆம் பாதங்கள் )

**தொழில் மாற்றம் உருவாகும்!**

*வேகத்தோடு விவேகமும் சேர்த்து செயலாற்றும் மிதுன ராசி நேயர்களே!*

நீங்கள் அன்பிற்கு அடிமையானவர்கள். ஆகாரத்தில் அதிகக் கட்டுப்பாடு செலுத்துவீர்கள். பேசவேண்டிய இடத்தில் பேச வேண்டியதைப் பேசிக்காரியம் சாதித்துக்கொள்வீர்கள். சுறுசுறுப்பு உங்கள் உடன்பிறப்பாகும். எதிலும் வேகம் காட்டாமல் செயற்பட்டால் தான் வெற்றிகிட்டும் என்ற தாரக மந்திரத்தை உணர்ந்து வைத்திருப்பீர்கள்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்ற உங்களுக்குக் கார்த்திகை மாதக் கிரக நிலைகள் நற்பலன்களை அள்ளிக்கொடுக்கும் விதத்திலேயே அமைந்திருக்கின்றன. குறிப்பாக,மாதத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை இராசியில் பதிகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். வெற்றியைத் தேடித் தரக்கூடியவர்கள் உங்கள் பக்கத்திலேயே இருப்பதால் எதற்கும் கவலைப் படத்தேவையில்லை.

கட்டடம் கட்டுவதில் இருந்து கல்யாணம் நடத்துவது வரை இதுவரை தடைகள் இருக்கிறதே என்று நினைத்தவர்கள் இனி மளமளவென்று காரியத்தை முடித்து மகிழ்ச்சி காண்பார்கள். மாதத் தொடக்கத்தில் சனி நான்கில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. தேக நலனிலும் அக்கறை தேவை.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

மாதத் தொடக்கத்தில் 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் நேற்று தொடக்கம் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். செயல் ஸ்தானம் எனப்படும் இடத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். சிறு சிறு பிரச்சினைகள் தலை தூக்கினாலும்,வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.குரு சொந்த வீட்டில் பலம் பெற் றுப் பார்க்கும் பொழ்து, பார்வைக்குப் பலன் அதிகம் உண்டு.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே குடும்பக் கவலை தீரும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டாமல் இருந்தால் கூட அந்தக் காரியங்களில் வெற்றி கிட்டும்.

நீங்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்து இனிச் செலவிற்கு அஞ்சமாட்டீர்கள். காரியங்கள் செய்யத் தொடங்கும் பொழுதே காசு, பணம் கைகளுக்கு வந்து சேரும். அரசியல் அனுகூலம் உண்டு. ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தூக்க நிலையும் தேக்க நிலையும் இனி மாறி ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்துச் செயற்படுவீர்கள்.

குருபார்வையால் உத்தியோகத்தில் உயர்வும் ஊதிய உயர்வும் ஊதியம் கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். நாட்பட்ட நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

**தனுசு –செவ்வாயின் ஆதிக்கம்!**

இலாபாதிபதி செவ்வாய் ஏழில் சஞ்சரிக்கும் பொழுது அந்நியதேச அனுகூலம் கிட்டும். வாழ்க்கைத் துணையால் வருமானம் வரும் விதத்தில் வேலைவாய்ப்புகள் கிடைக்கலாம். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி உங்களுக்கு ஒத்துழைப்பு செய்வர்.

விநாயகர் வழிபாட்டில் ஆர்வம் காட்டினாலும் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும். நல்ல திருப்பங்களும் உருவாகும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதத்தில் பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள். பணவரவு திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க இல்லத்தினர் முடிவெடுப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரிகள் அனுகூலம் செய்வர். இராகு–கேது வழிபாடுகளை முறையாகச் செய்தால் முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட முட்டுக்கட்டைகளை அகற்றும் கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் மாதமாக இம்மாதம் அமையும்.




(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம் ஆயிலியம்)

**பணப்புழக்கம் அதிகரிக்கும்!**

*பொது வாழ்வில் ஈடுபட்டு பொன்னான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் கடக இராசி நேயர்களே!*

நீங்கள் அறிவை மின்னல் வேகத்தில் செயற்படுத்துபவர்கள். எப்பொழுதும் குதூகலமாக இருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். சோம்பல் உங்களுக்கு அறவே பிடிக்காது சுயசிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். சுயநலத்துடன் வாழ்பவர்களுக்கு மத்தியில் நீங்கள் பொதுநலத்தில் அக்கறை காட்டி தலைமைப் பதவிக்கு தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துக்காட்டுவீர்கள்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் சந்திரன் ஒன்பதில் சஞ்சரிப்பது யோகம்தான். பொன், பொருட்கள் வந்து சேரும். புதிய திருப்பங்கள் உருவாகும்.அன்பு நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அவர்கள் உங்கள் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பர்.

தனாதிபதியும் சகாய ஸ்தானதிபதியும் பஞ்சமாதிபதியும் ஐந்தில் ஒன்றுகூடி சஞ்சரிப்பதால் பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். இல்லத்தில் இதுவரை நடந்த சுபகாரிய பேச்சுக்கள் முடிவடையவில்லையே என்ற கவலை இனி அகலும். சகோதர வழியில் கூட சகாயங்கள் கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புகளில் புதிய மாற்றங்கள் வந்து சேரும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

நேற்று முதல் மீனராசியில் குரு சஞ்சரிக்கிறார். அதன் பார்வை உங்கள் இராசி யில் பதிவதால் சுமார் ஐந்தரை மாத காலத்திற்கு எந்தக் கவலையும் உங்களுக்கு ஏற்படாது. இருப்பினும் , பன்னிரெண்டாமிடத்தில் கேது சஞ்சரிப்பதால் திடீர் விரயங்களையும் சந்திக்க நேரிடலாம். அதை வீண் விரயமாக்காமல் சுப விரயமாக்க வீட்டிற்கு தேவையான, விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது. விற்ற சொத்துகளுக்கு பதிலாக புதிய சொத்துகளை வாங்கச் சேர்க்க முன்வருவீர்கள். தொழில் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். புதிய தொழில் தொடங்க நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

குருவின் பார்வை உங்கள் இராசியிலும் மூன்று,ஐந்து ஆகிய இடங்களிலும் பதிவதால் வழக்குகளில் வெற்றி கிட்டும். வாய்தாக்கள் ஓயும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச் சுறுத்தல்கள் மாறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளுடைய சேமிப்போடு ,பிள்ளைகளின் வருமானமும் சேரும். அவர்களுக்கான கல்விக்கும் கல்யாணத்திற்கும் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**தனுசு – செவ்வாயின் ஆதிக்கம்**

செவ்வாய் விருச்சிக இராசியில் இருந்து எதிர்வரும் 28ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,10 க்கு அதிபதி 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால் தொழில் செய்வதற்கு இதுவரை எதிர்பார்த்த கடன் உதவிகள் இப்பொழுது கிடைக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு தற்காலிக

**சிவல்புரி சிங்காரம்**

மாக வந்த இடமாற்றம் இரத்து ஆகும். புதிய வேலைவாய்ப்பை தேடுபவர்களுக்கு நல்ல வேலை அமைவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாட்டை திருப்தியாக செய்து வந்தால் நன்மைகள் உடனடியாக வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் குடும்பச் செலவுகள் கூடலாம். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. பிற்பாதியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும். பிரச்சினைக்குரிய செயற்பாடுகள் நல்ல முடிவிற்கு வரும். உங்கள் பெயரில் தொழில் தொடங்குவதற்கும் நல்ல காரியங்கள் செய்வதற்கும் முயற்சி எடுப்பர். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி.வந்து சேருவர். தெசாபுத்திக் கேற்ப தெய்வ வழிபாடு செல்வ நிலையை உயர்த்தும். (தொடரும்)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வலம்புரியில் கார்த்திகை மாத இராசி பலன்கள் தொடர்ந்து வெளிவருவதால் பிறந்த திகதி பலன்கள் வெளிவராது என்பதை அறியத்தருகிறோம். கார்த்திகை மாத இராசி பலன்கள் நிறைவுற்றதும் பிறந்த திகதி பலன்கள் தொடர்ந்து வெளிவரும்.

# அரசியல் நோக்கங்களை அடைவதற்காக சமய விவகாரங்களை பயன்படுத்தும் அரசியல்வாதிகள்

## விமலசார தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை அடைவதற்காக சில அரசியல்வாதிகள் சமய விவகாரங்களை பயன்படுத் திக் கொள்வதாக இங்கிரியே விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.

சசுனட அருண திட்டத்தின் ஊடக தமது விஹாரைக்கு வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியை தாம் நிராகரித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சசுனட அருண திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சஜித் பிரேமதாசவும் சில உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவினை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சமய விவகாரங்களை பயன்படுத்துவதனை அனுமதிக்க முடியாதெனவும் தமது விஹாரையை எவரும் அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்த இடமளிக்க போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை உதவி வழங்குமாறு கோரிக்கை விடுத்த காரணத்தால் தாம் குறித்த விஹாரைக்கு பணம் வழங்கியதாக சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உதவி கோரிய நான்கு விஹாரைகளுக்கு மட்டுமே தாம் பணம் வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அனுமதியின்றி இயங்கும் கையடக்கத் தொலைபேசி நிலையங்கள் முற்றுகை

(கொழும்பு)

தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அனுமதியின்றி நடத்தப்படுகின்ற கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களையும் அவற்றை திருத்தும் நிலையங்களையும் சுற்றிவளைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாடு முழுவதும் உள்ள பல பிரதேசங்களில் இவ்வாறான சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக தொலைக்காட்சி அலை வரிசைகளை பெற்று ஒளிபரப்பு செய்து வரும் நிலையங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ)




யாழ்.விக்ரோறியாக் கல்லூரி மாணவி செல்வி லாவண்யா சயந் தன் அகில இலங்கை ரீதியில் நடை பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தனி நடன நிகழ்வில் முதலிடம் பெற்றுள்ளார். இவருக்கான கௌரவிப்பு வைபவம் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாண வியும் ஆசிரியர்களும் அழைத்து வரப்படுவதையும் மாணவி கல்லூரி வ.ஶ்ரீகாந்தனால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## மாணவர்களுக்கு பாலியல் கைநூல் விநியோகம் குறித்து நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சர்வதேசப் பாடசாலை ஒன்றின் 11 வயது பிரிவினர் மத்தியில் சர்சைக்குரிய பாலியல் கல்வி கைநூல், ஒன்று விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் இன்றையதினம் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப் படவுள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவை நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று. கொழும்பு மேலதிக நீதிவானிடம்,இந்த கைநூல் தொடர்பாக அறிக்கை பொலிஸாரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த கைநூலில்,இனங்களில் மதிப்பு பாலியல் சம்பந்தப்பட்ட படங்கள் , மற்றவர்கள் மீது காதல் செலுத்துதல் போ்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த கைநூல் தொடர்பில் குற்றம் சுமத்தப்படுகின்றன போதும், குறித்த பாடசாலையின் அதிகாரிகள், நூல் உரியமுறையில்மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது என வாதிடுகின்றனர். (ஶ்ரீ-2)

## நாட்டில் கற்பழிப்பு சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் கற்பழிப்பு சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


கடந்த ஆண்டில் மாத்திரம் இரத்தினபுரியில் 107 கற்பழிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அநுராதபுரத்தில் 98 சம்பவங்களும், கேகாலையில் 82 சம்பவங்களும், எல்பிட்டியவில் 68 சம்பவங்களும், மாத்தறையில் 65 சம்பவங்களும் மொனராகலையில் 64 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை குற்றச் செயல்களை பார்த்தால், கொழும்பின் புறநகரான நுகேகொடையில் அதிகூடிய 4ஆயிரத்து 909 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதற் கடுத்ததாக களனி, கல்கிஸை, கம்பஹா ஆகிய இடங்களில் குற்றச்செயல்கள் அதிக மாக பதிவாகியுள்ளன. (ஶ்ரீ-2)

## 28 ஆம் ஆண்டு பிறந்ததின நினைவு
## அமரர் நடராசா மருஜன்

(ஆதியாமலை உடுப்பிட்டி)

பிறந்த திகதி-22.11.1982



அன்பான மூத்த முத்தே
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டாய்
இன்பமாய் நீ வாழ்ந்த காலம்
மறைந்ததுவோ
ஈரவிழிகள் எமக்கு என்னும்
காயவில்லை
உடுநகர் தந்த உத்தமபுத்திரனே
ஊர் விட்டு விலகிச்-
செல்ல நினைத்தாயோ
எக்கணம் வருவாய் நீ
ஏங்கியே தவிக்கின்றோம்
ஐயம் என்னவென அறியாத செல்வமே
ஒருமுறை வந்து எம்மைப்பாராயோ
ஓங்காரமாய் வாழ்ந்தவனே
வாராயோ வந்து பாராயோ

உன் பிரிவால் துயருற்று, உன் மறு பிறவிக்காய்
காத்திருக்கும் கண் அயராத உன்
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனன்மார்.

(2888)

## 2010.11 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1874 - சிலியின் ஜுவான் பெர்னாண்டஸ் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1908 - அல்பேனிய எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1922 - துட்டன்காமுன் என்ற எகிப்திய பாரோவின் 3ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமாதி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1935 - பசுபிக் பெருங்கடலைத் தாண்டி முதன்முறையாக விமானத் தபால்களை விநியோகிக்கும் பணியில் சைனா கிளிப்பர் என்ற விமானம் கலிபோர்னியாவை விட்டுப் புறப்பட்டது. (இவ்விமானம் நவம்பர் 29 இல் 110,000 தபால்களுடன் மணிலாவை அடைந்தது)
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத் தாலியரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கிரேக்கப் படைகள் அல்பேனியாவுக்குள் நுழைந்து கோரிட் சாவை விடுவித்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனிய தளபதி பிரீட்றிக் பவுலஸ், ஸ்டாலின்கிராட்டில் தாம் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக ஹிட்லருக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பினான்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், சீனத் தலைவர் சியாங் காய்-செக் ஆகியோர் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சந்தித்தனர்.
- 1943 - லெபனான், பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1956 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மெல்பேர்னில் ஆரம்பமாயின.
- 1965 - இந்தோனேசியாவின் கம்யூனிசத் தலைவர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1974 -ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் பாலஸ்தீன விடுதலை இய்க்கம் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றது.
- 1975 - பிரான்சிஸ்கோ பிராங்கோவின் மறைவை அடுத்து ஜுவான் கார்லொஸ் ஸ்பெயின் மன்னனானார்.
- 1989 - மேற்கு பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் லெபனான் ஜனாதிபதி ரெனே மோவாட் கொல்லப்பட்டார்.
- 1990 - மார்கரட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியைத் துறந்தார்.
- 2002 - நைஜீரியாவில் உலக அழகிப் போட்டியாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 2003 - ஜோர்ஜியாவில் அதிபர் எடுவார்ட் ஷெவர்நாட்சேயின் எதிராளிகள் நாடாளுமன்றத்தைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து அதிபரைப் பதவி விலகுமாறு கோரினர்.
- 2005 - ஜெர்மனியின் முதலாவது பெண் அதிபராக (சான்சிலர்) ஏங்கலா மேர்க்கெல் தெரிவு செய்யப்பட்டார்.
- 2005 - எக்ஸ் பாக்ஸ் 360 நிகழ்பட விளையாட்டு இயந்திரம் வெளியிடப்பட்டது.
- 2007 - இலங்கை அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தடை விதித்தது.

### பிறப்புகள்

- 1890 - சார்லஸ் டி கோல், பிரெஞ்சுத் தளபதியும், அரசியலாளரும் (இ.1970)
- 1939 - முலாயம் சிங் யாதவ், இந்திய அரசியல்வாதி
- 1970 - மாவன் அத்தப்பத்து, இலங்கையின் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1963 - ஜோன் எப்.கென்னடி, 35ஆவது அமெரிக்க ஜனாதிபதி, (பி.1917)
- 1976 - மு.திருச்செல்வம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் (பி.1907)

**1963 - அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடி டெக்சாசில் லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். டெக்சாஸ் மாநில ஆளுநர் "ஜோன் கொனலி" படுகாயமடைந்தார். அதே நாளில் உதவி-ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் அமெரிக்காவின் 36ஆவது ஜனாதிபதி ஆனார்.**



# இன்னொரு ஒசாமா பின்லேடன்! அமெரிக்க உளவுத்துறை தகவல்



மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலைப் போன்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் தாக்குதல் நடத்தப்போவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் புனே, ஜெர்மன் பேக்கரியில் நடந்த குண்டு வெடிப்பில், பாகிஸ்தானில் இருந்து இயங்கும் ஹர்கத்- உல்- ஜிகாத்- இஸ்லாமி அமைப்புக்குத் தொடர்பு உள்ளதாக ஜெர்மன் உளவுத்துறையினர் கருதுகின்றனர். இதைப் பற்றி மேலும் தீவிரமாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்கா மற்றும் ஜெர்மன் உளவுத்துறை அதிகாரிகள் சேர்ந்து நடத்திய இந்தப் புலனாய்வில் வெளிப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஒற்றைக் கண்ணுடைய நீண்ட தாடி வைத்து கறுப்பு கூலிங் கிளாஸ் அணிந்திருக்கும் இலியாஸ்காஷ்மீரி என்பவன் ஹர்கத்- உல்- ஜிகாத்- இஸ்லாமி எனும் பயங்கரவாதக் குழுவின் தலைவனாக உள்ளான்.

பாக். ஆக்ரமிப்பு காஷ்மீரில் பிறந்த இவனுக்கு இப்போது வயது 40.பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ யில் பயிற்சி பெற்றவன். அங்கிருந்து வெளியேறி அல்-கொய்தா அமைப்பின் உதவியுடன் தனக்கென ஒரு பயங்கரவாதக் குழுவை ஏற்படுத்திக்கொண்டான்.

ஒசாமாவின் அதிதீவிர சீடனாக தன்னை காட்டிக்கொண்டுள்ள காஷ்மீரி சமீப காலமாக ஜிகாத் எனப்படும் பயங்கரவாத செயல்களை தெற்கு ஆசியாவைத் தாண்டி முன்னெடுத்து வருகிறான். அடுத்ததாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டுள்ளான்.

மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலைப் போன்று பாரீஸ், லண்டன் மற்றும் பெர்லின் நகரங்களிலும் தாக்குதல் நடத்துவதற்காக நன்கு பயிற்சி பெற்ற பயங்கரவாதிகளை ஐரோப்பிய நாடுகளில் ஊடுருவச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இவன் இன்னொரு ஒசாமா பில்லேடன்.இவனது தாக்குதல் பட்டியலில் இந்தியாவுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

புனேயில் உள்ள ஜேர்மன் பேக்கரியில் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காஷ் மீரிக்கு தொடர்புள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய உளவுத்துறை அதிகாரிகளால் தேடப்பட்டுவரும் பயங்கரவாதிகளில் காஷ்மீரி முதலிடத்தில் உள்ளான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## எரிமலைக்கு பலியானோர் 283 ஆக உயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள மெரபி எரிமலை வெடித்ததில் பலியானோரின் எண்ணிக்கை 283 ஆக அதிகரித்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் அது வெடிக்க ஆரம்பித்ததில் இருந்து தற்போது வரை இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இது குறித்து அந்நாட்டு பேரிடர் மேலாண்மை அதிகாரி ரத்னசாரி கூறுகையில், மெரபி எரிமலையால் இதுவரை 283பேர் பலியாகியுள்ளதுடன் இரண்டு இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாம்களில் உள்ளனர்.

எரிமலையைச் சுற்றி பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டுவருகின்றன. சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் சிலர் இறந்துள்ளனர் என தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கடந்த நூற்றாண்டின் சக்திவாய்ந்த பெண்களாக இந்திராகாந்தி, அன்னை தெரேசா தெரிவு

(வோஷிங்டன்)

கடந்த நூற்றாண்டில் சக்தி வாய்ந்த பெண்கள் வரிசையில் மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்திக்கு ஒன்பதாவது இடம் கிடைத் துள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் டைம் பத்திரிகை கடந்த நூற்றாண்டில் சக்தி வாய்ந்தவர்களாக விளங்கிய 25 பெண்கள் பற்றிய பட்டியலை கடந்த 19ஆம் திகதி வெளியிட்டது. இந்தப் பட்டியலில் நோபல் பரிசு பெற்ற அமெரிக்காவின் முதல் பெண்மணி ஜேன் அடம்ஸ் முதலிடம் பெற்றுள்ளார். அந் நாட்டின் தற்போதைய வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளார்.



இந்தியாவிலிருந்து இப்பட்டியலில் இந்திரா மற்றும் அன்னை தெரேசா இருவர் மட்டுமே பெற்றுள்ளனர்.இவர்களில் இந்திரா ஒன்பதாவது இடத்திலும் தெரோசா 22 ஆவது இடத் திலும் உள்ளனர்.

மேலும் இப்பட்டியலில் மேரி கியூரி, மடோனா, கோல்டாமெயர், ஏஞ்சலா மெர் கெல், எலினார் ரூஸ்வெல்ட், மார்க்ரெட் தாட்சர், ஆப்ரா வின்ப்ரே மற்றும் விர்ஜினியா உல்ப் போன்றோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்திரா பற்றிய தன் புகழுரையில், உலகில் அதிக காலம் பிரதமர் பதவியில் இருந்த ஒரே பெண் இவர் தான் என்றும் பொருளாதார நெருக்கடி,பஞ்சம், இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனை , ஊழல் புகார்கள் மற்றும் அண்டை நாடானா பாகிஸ்தான் உடன் போர்,அதனால் வங்கதேசம் என்ற தனி நாடு உருவானது என பல சர்ச்சைகள் அவரது மூன்று ஆட்சிக்காலங்களில் நிகழ்ந்தன என்று அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்னை தெரேசா பற்றி கூறுகையில், போதுமான மருத்துவப் பயிற்சி மேற்கொள்ளாதது, வறுமையைப் போக்க பெரியளவில் முயற்சிகள் மேற்கொள்ளாதது, குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருக்கலைப்பு ஆகியவற்றை எதிர்த்து ஆட்சியாளர்களுக்கு அடங்கிப் போவது ஆகியவற்றுக்காக அவர் விமர்சனத்துக்குள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




போர்த்துக்கல் லிஸ்பனில் நடைபெற்ற நேட்டோ மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி ஒபாமா மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரை படத்தில் காணலாம்.




# எவரெஸ்ட் உச்சியை தொட துடிக்கும் நேபாள சிறுவன்

இளம் வயதில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை தொட்டு சாதனை படைக்க 9 வயது நேபாள சிறுவன் ஒருவன் தீவிரமாக முயற்சி செய்து வருகிறான்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்டான் ரொமேரோ என்ற 13 வயது சிறுவன் கடந்த மே மாதம் 6 ஆயிரம் மீற்றர் உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்து சாதனைபடைத்துள்ளான். அந்தச் சாதனையை முறியடிக்கும் விதத்தில் நேபாள சிறுவன் செட்டன் ஷெர்பா எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடையத் தீவிர முயற்சி மேற்கொண்டிருக்கிறான்.

தற்போது அவனுக்கு 9 வயதாகிறது. ஆனால் நேபாள சட்டத்தின்படி மலை ஏறுவதற்கு 16 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். ஆனால் ஷெர்பாவின் தந்தை பெம்பா போர்ஜ் ஷெர்பா தனது மகன் 10 வயதில் மலை ஏறுவதற்கு நேபாள அரசிடம் சிறப்பு அனுமதியை பெற்றுள்ளார்.

அதன்படி அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஷெர்பா ஏற உள்ளான். அதற்காக இப்போதே தீவிரமாக பயிற்சி எடுத்து தயாராகி வருகிறான்.மிக இளம் வயது சாதனையாளராக தனது மகன் வர வேண்டுமென்பது தான் தனது இலட்சியம் என்று பெம்பா போர்ஜ் கூறுகிறார். எனினும் நேபாள சுற்றுலாத்துறை அமைச்சக அதிகாரிகள் 16 வயதிற்கும் குறைவான வயதுடையோருக்கு மலை ஏறுவதற்கான அனுமதியை வழங்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# என் மனைவி கமீலா தான் பிரிட்டனின் அடுத்த மகாராணி

## இளவரசர் சார்ள்ஸ் தெரிவிப்பு

(லொஸ் ஏஞ்சல்ஸ்)



என் மனைவி கமீலாதான் பிரிட்டனின் அடுத்த மகாராணி என பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் கூறியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்காவில் உள்ள என்.பி.சி. தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தனது வாழ்க்கை முறை, இயற்கை மீதான காதல், ஊடகத்துடன் தனக்குள்ள தொடர்பு மற்றும் தனது மகன்களும் இளவரசர்களுமான ஹரி மற்றும் வில்லியம் குறித்தும் மனம் திறந்திருக்கிறார். இந்தப் பேட்டி தற்போது அமெரிக்காவில் ஒளிபரப்பு செய்யப்படுட்டு வருகிறது.

அதில் பிரிட்டனின் அடுத்த மகாராணி குறித்த கேள்விக்கு சார்ள்ஸ் கூறுகையில், இன்னும் நீண்ட காலம் நான் உயிருடன் இருந்தால் நான் தான் அடுத்த மன்னர். அப்படியெனில் பிரிட்டனின் அடுத்த மகாராணியாக எனது மனைவி கமீலா அறிவிக்கப்படுவார் என்றார்.

சார்ள்ஸ் தனது முதல் மனைவி இளவரசி டயானாவை கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 1996இல் விவகாரத்து செய்தார். அதைத் தொடர்ந்து வீதி விபத்து ஒன்றில் டயானா உயிரிழந்தார். அதன்பின் கடந்த2005இல் கமீலா பார்க்கர் பவுல்ஸ் என்பவரை திருமணம் செய்து கொண் டார். பிரிட்டன் வரலாற்றில் மன்னரின் மனைவி தான் ராணியாக அறிவிக்கப்படுவார். அவருக்கு குயின் கான்சார்ட் பட்டமும் கொடுக்கப்படும் சார்ள்ஸ் மன்னராகும். போது கமீலா மகா ராணியாக அறிவிக்கப்படுவார் என இருவரின் திருமணத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஸ்ரீ-2)

# உயிரியல் துறை படிப்புகள் தமிழ்நாட்டில் பயில்வதற்கு வாய்ப்பு

உயிரியல் துறையில் நாட்டம் அதிகம் உள்ளவர்களுக்கான படிப்புகள் தற்போது அதிகளவில் உள்ளன.

அவற்றில்அதிக மாணவர்களால் தேர்வு செய்யப்படும் ஒரு துறை உயிர் வேதியியல் துறையாகும்.

உயிர்வேதியியல் என்பது உயிரினங்களில் நிகழும் வேதி யியல் மாற்றங்களைப் படித்து ஆராயும் துறையாகும். உயிரணுக்களின் அங்கமான புரதங்கள், காபோஹைதரேட்டுகள், கொழுப்புகள், நியூக்ளிக் அமிலங்கள் மற்றும் உயிர் மூலக்கூற்றுகள் (பயோ மொலிக்யூல்) போன்றவற்றின் வடிவம் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை இத் துறையில் படிக்கலாம்.


உயிர்மூலக் கூறுகளில் பெரும்பாலானவை சிக்கலான மற்றும் பெரிய மூலக் கூறுகள் கொண்டவை. இவை பொலிமர்கள் என அழைக்கப்படுகின்றன. பொலிமர்கள் சிறு சிறு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. இதை மோனோமர் என்று அழைப்பர்.

உதாரணமாக, புரதம் ஒரு பொலிமர். புரதத்தின் மூலக்கூறுகள் ஒவ்வொன்றும் தலா 20 அமினோ அமிலங்கள் கொண்டவை. உயிர் வேதியியல் துறையின் வாயிலாக இத்தகைய பொலிமர்களின் வேதியியல் தன்மைகள் மற்றும் என்சைம் வினைகள் போன்றவற்றை ஆராய்ந்து படிக்கலாம்.

மருத்துவம், விவசாயம் , நியூட்ரிசன் துறைகளில் இத்துறை வல்லுநர்களின் பங்களிப்பு அதிகம் உண்டு.

மருத்துவத்துறையில் , புதியதாக ஏற்படும் நோய்களுக்கான காரணங்கள், மருத்துவ முறைகள் போன்றவற்றை ஆராய்வர். விவசாயத்துறையில் புதிய யுக்திகளை பயன்படுத்தி பயிர் வளர்த்தல், பூச்சிக்கொல்லிகளை தயாரித்தல், பயிர்களை பாதுகாத்தல் போன்றவற்றை மேம்படுத்துவர்.

நியூட்ரிசன் துறையில், விற்றமின்கள்,



புரதங்கள், காபோஹைதரேட்டுகள் போன்றவை அதிகம் உள்ள உணவுப் பொருட்களை உண்பதால் ஏற்படும் பக்கவிளைவுகள், சரியான அளவில் ஊட்டச்சத்துக்களை பேணும் வழிமுறைகள் போன்றவை ஆராயப்படுகின்றன.

இத்துறையில், உயிர் வேதியியில் மட்டுமல்லாமல் மூலக்கூறு உயிரியல் , ஜெனிடிக்ஸ் (மரபியல்), மைக்ரோபயாலஜி, வளர்சிதை மாற்றம் (மெட்டாபாலிசம்) போன்றவற்றையும் படிக்கலாம்.

இத்துறையில் சேர விரும்பும் மாணவர்கள் குறைந்தபட்ச தகுதியாக க.பொ.த உயர்தரத்தி' அறிவியல் பாடத்தை பின்புலமாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இளநிலை (பி.எஸ்.சி), முதுநிலை (எம்.எஸ்.சி.), பி.எச்.டி.போன்ற படிப்புகள் இத்துறையில் உள்ளன.

இத்துறையில் இள நிலை முடித்தவர்கள் முதுநிலைப் படிப்பில் பயோ டெக்னோலஜி, பயோ இன்பர்மேடிக்ஸ் உள்ளிட்ட உயிரியல் சார்ந்த துறைகளில் சேரத் தகுதி பெற்றவர்களாவர்.

**பயிலும் நிறுவனங்கள்**

சென்னைப் பல்கலைக்கழகம், (http://www.unom.ac.in/).

அவினாசிலிங்கம் பெண்கள் கல்லூரி, கோவை. (http://www. avinashilingam. edu).

வைசியா கல்லூரி,சேலம் (http://www.vysyacollege.org),

இராமகிருஷ்ணா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை (http://www.ramarishnacasfor-womens.org):

அப்பலோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை (http://www.apollocolleges.in).

சவுராஷ்டிரா கல்லூரி, மதுரை (http://www.soucollege.com)

டி.ஜி., வைஷ்ணவா கல்லூரி, சென்னை (http://www.dgvaishnavcollege. com),

எத்திராஜ் பெண்கள் கல்லூரி, சென்னை (http://www. ethirajcollege. edu.in).

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி (http://www.bdu.ac.in).

மீனாட்சி பெண்கள் கல்லூரி, சென்னை (http:// www.meenakshicollege. com).

**வேலைவாய்ப்பு**

இத்துறையில் பட்டப்படிப்பு முடித்தவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ஆய்வுப் பணியில் அமரலாம். புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற நோய் களுக்கு மருந்துகளை ஆராயும் சில மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளில் இவர்களின் பங்கு மிக அதிகமாக இருக்கும். பயிற்சி நிலையில் இருப்பவர்கள் தொடக்கத்தில் மாதம் 200 முதல் 300 டொலர்கள் வரை சம்பளமாகப் பெறலாம்.

ஆய்வுத்துறையில் ஈடுபடுபவர்களின் சம்பளம், பயிற்சி நிலையில் இருப்பவர்களை விட பல மடங்கு அதிகமாக இருக்கும். வெளிநாடுகளில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் இத்துறையில் பி.எச். டி. முடித்தவர்களுக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

## பொது அறிவு

- ஓசோன் படலம் பூமியில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது?
  *40-50 கி.மீ*
- மிக அதிக வெப்பமுள்ள கிரகம் எது?
  *வீனஸ்*
- ஜெட் இன்ஜினைக் கண்டு பிடித்தவர் யார்?
  *பிராங்க் விட்டில்*
- நிலையான கூட்டணி ஆட்சி உள்ளநாடு எது?
  *ஜெர்மனி*
- மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நாள் எது?
  *ஜனவரி 30,1948*

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# உங்கள் குழந்தைகள் உன்னதமானவர்களே!

(08.11.2010ஆம் திகதிய தொடர்ச்சி...)

குழந்தையின் மனதை புரிந்து கொண்ட ஆசிரியர், 'இந்தப் பாடசாலையில் அவரவருக்குப் பிடித்த படங்களை வரையலாம். அவை அழகாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது' என்கிறார். உடனே குழந்தையின் முகத்தில் சிரிப்பு வருகிறது. ஏனென்றால் தன்னால் சிறப்பாக வரையமுடியாது என்று கருதுவதால்தான் தன் இயலாமை தெரிந்து விடுமோ என்று குழந்தை கருதுகின்றது. வரையும் படத்தை மதிப்பீடு செய்யாமல் மதிக்கும் ஆசிரியர் இருக்கும்போது ஒருவகை பாதுகாப்பு உணர்வு குழந்தைக்கு ஏற்படுகின்றது.

குழந்தைகள் சாதாரணமாக அறிவுரைகளையும், விமர்சனங்களையும் விரும்புவதில்லை. முதலில் அவர்களைப் புரிந்து கொண்டு, அவர்களை நாம் மதிக்கின்றோம் என்று உணர்த்தினால்தான் நமது அறிவுரையை எடுத்துக்கொள்வார்கள். ஒரு குழந்தை தனக்கு கணித பாடம் கடினமாக உள்ளது என்று கூறினால் உடனே அதை மறுத்து, நன்றாகப் படித்தால் முடியும் என்று அறிவுரை கூறத் தொடங்கக் கூடாது.

கணிதத்தில் நீ அதிக புள்ளிகள் வாங்க முடியவில்லை என்றால் நாங்கள் வருத்தப் படுவோம் என்று கருதவேண்டாம், உன்மீது நம்பிக்கை உள்ளது. நிச்சயம் நல்ல பெறுபேறு பெறுவாய். உனது முயற்சிக்கு எங்கள் ஒத்துழைப்பு உண்டு என்று ஊக்கப்படுத்தினால் குழந்தை தானாகவே கடினமாக உழைக்கத் தயாராகிவிடும்.

**வழிகாட்டுதல் தொடரும்**

குழந்தைகள், பெற்றோரை விரும்புவது போலத் தோன்றும் அதேசமயம் அதிருப்தியையும் வெளிப்படுத்துகிறார்கள். எங்கு அன்பு உள்ளதோ, அங்கு சற்று வெறுப்பும் இருக்கும். எங்கு பாராட்டு அதிகம் உள்ளதோ, அங்கு சற்று பொறாமையும் வெளிப்படும். இவ்வாறு இரண்டு மனதுடன் குழந்தைகள் செயல்படுவார்கள். அம் மாதிரியான சூழ்நிலைகளில் அமைதியாக, விமர்சனமில்லாமல் பேச வேண்டும்.

எத்தகைய செயல்பாடு அதிருப்தியைத் தருகின்றது, எத்தகைய நிகழ்வு இழப்பை ஏற்படுத்துகின்றது என்று மதிப்பீடு செய்யக் குழந்தைகளைப் பழக்கவேண்டும். சில பெற்றோர்கள், முட்டையை குழந்தை உடைத்து விட்டால் கால் உடைந்தது போலவும், ஜன்னல் உடைந்துவிட்டால் இதயமே நொறுங் கிவிட்டது போலவும் கூச்சல் போடுவார்கள். அவற்றை அதனதன் பரிமாணத்தில் குழந் தைகள் புரிந்துகொள்ளும் படி உணர்த்த வேண்டும்.

குழந்தைகளின் கல்வி, பழக்கவழக்கங்கள் சரியான நேரத்தில் சரியான அளவு கோபத்தை வெளிப்படுத்துவதும் முக்கியம்தான். சில நேரங்களில் இந்தச் செயல் எனக்கு அதிருப்தியை அளிக்கின்றது. கோபத்தை வரவழைக்கின்றது என்று கூறினாலே குழந்தைகள் புரிந்துகொள்வார்கள். சில நேரங்களில் அதற்கான காணத்தையும் பெற்றோர்கள் விளக்கமாகக் கூறலாம். குழந்தைகள் எந்தளவுக்கு மேல் வரம்பைத் தாண்டக் கூடாது என்று அறிந்திருக்க வேண்டும். அந்த கோட்டைத் தாண்டாமல் செயல்படப் பழக்க வேண்டும்.

ஐந்து வயதுக் குழந்தை சுவரில் கிறுக்கும் போது ஆத்திரமாக அடிக்காமல், கடிந்து கொள்ளாமல் அது தனது உணர்வையும், திறமையையும் வெள்ளைக்காகிதத்தில்வெளிப் படுத்தப் பழக்க வேண்டும்.

குழந்தையை பயமுறுத்துவது என்பது செய்யக் கூடாத செயலை மீண்டும் செய்யுங்கள் என்று அழைப்பது போல. குழந்தை கள் பொது இடங்களில் தமது உணர்வுகளை நேர்த்தியாக வெளிப்படுத்தப் பெற்றோர் உதவ வேண்டும்.வின்ஸ்டன்சேர்ச்சில்தனதுபாடசாலை பருவத்தில் மெதுவாகக் கற்கும் திறன் கொண்டவர் என்று கூறப்பட்டு அதற்கான வகுப்பில் சிறிது காலம் பயிற்றுவிக்கப்பட்டார். பின்னாளில் அவர் பிரதமர் அளவிற்கு உயர்ந்து போர்க் காலத்தில் அனைவரின் மனதிலும் கதாநாயகனாகத் திகழ்வார் என்று யாரும் கருதவில்லை.

உங்கள் குழந்தைகளும் உன்னதமானவர்களே! அவர்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் திறமையை அறிவை வெளிக் கொண்டு வரும் கருவிகளாக பாது காவலர்களாக நீங்கள் அமையும் போது இந்தியாவின் எதிர்காலம் வலிமையான தாகவும் பாதுகாப்பானதாகவும் ஊக்கமான நோக்கம் நிறைந்ததாகவும் அமையும்!

இலக்கு இல்லாத மனிதன் அரை மனிதன் என்று சான்றோர்கள் கூறுவார்கள். நாம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி பயணப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

பலமுறை தோல்விகளை தழுவக் கூடும். காரணம் என்ன... நாம் நம்முடைய இலக்கை நோக்கி செல்வதில்லை. அடுத்த வரின் வழிகாட்டுதல் அல்லது தூண்டுத லின் படி செல்கிறோம். பெரும் பாலானோர் தங்களுடைய இலக்கை நிர்ணயிப்பதில்லை. நம்மைப் பற்றிய எண்ணமும் தன்னம் பிக்கை குறைவுமே அதற்கு காரணங்கள். இவற்றை போக்குவதற்கு சில வழிகள்.

உங்கள் உள்ளாற்றலை அறியுங்கள் தன்னம்பிக்கையை வளருங்கள். மற்றவரிடம் இல்லாத தனித்திறமை உங்களிடம் உண்டு. அந்தத் திறமையை கண்டறிந்து சிறப்பாகச் செயல்படுங்கள்.

**உங்கள் வாழ்க்கையை சிறப்பாக்குங்கள்**

உங்களுடைய செயல்திறனை அறியுங்கள். அதன்மூலம் செய்யும் காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் பழக்கத்தை கொண்டு வாருங்கள்.

**வருத்தம் கொள்ளாதீர்கள்**

உங்களுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து வருத்தம் கொள்ளாதீர்கள்.

**கனவு காணுங்கள்**

எத்தகைய முயற்சிகள் மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை அடையலாம் என்று கனவு காணுங்கள்.

**திட்டமிடுங்கள்**

மேற்கொள்ளும் செயலில் வெற்றி காண தேவையான திட்டத்தை தீட்டுங்கள். அதை நடைமுறைப்படுத்துங்கள்.

**உங்களை நம்புங்கள்**

உங்கள் மீது அதிக நம்பிக்கை வையுங்கள் . அதன் மூலமாக தான் தன்னம்பிக்கையும் மனதைரியமும் பெருகும்.

**முயற்சியை கைவிடாதீர்கள்**

ஒரு செயலை செய்யும் போது தோல்வி ஏற்பட்டால் அதனை கைவிடாமல் தொடர்ந்து போராடுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும். இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை மிகவும் எளிதாக அடையலாம்.

உங்கள் குழந்தைகளும் உன்னதமானவர்களே!அவர்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் திறமையை, அறிவை வெளிக் கொண்டுவரும் கருவிகளாக, பாதுகாவலர்களாக நீங்கள் அமையும்போது எதிர்காலம் வலிமையானதாகவும் பாதுகாப்பானதாகவும் ஊக்கமான நோக்கம் நிறைந்ததாகவும் அமையும்! (முற்றும்)



யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான "கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி" சன்மார்க்க வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் சுகாதாரமும் போசாக்கும் பற்றிய விரிவுரையை வளவாளரான டாக்டர் கே.அற்புதராஜா நடாத்துவதையும் வடமாகாண முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா மற்றும் யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விபுலநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## ஐ.தே.க.வின் பொதுச் சபைக் கூட்டத்தை பிற்போட ரணிலின் ஆதரவாளர்கள் முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தை காலம் தாழ்த்துவதற்கு ரணில் ஆதரவாளர்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதன் மூலம் பொதுச்சபைக் கூட்டத்தை காலம் தாழ்த்துவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்துவதென ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு முன்னர் தீர்மானித்திருந்தது.

பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றால் கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக ரணில் விசுவாசிகள் இந்த கூட்டத்தை காலம் தாழ்த்துவதற்கு முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென பல உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் ரணில் விக்ரமசிங்கவிற்கு விசுவாசமானவர்கள் தொடர்ந்தும் கட்சித் தலைமைப் பதவியில் ரணிலை நீடிக்கச் செய்வதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## முகத்தில் மசாஜ் செய்தால் மன அழுத்தம் குறையும்

### ஆய்வில் தெரிவிப்பு

(லண்டன்)

முகத்தில் மசாஜ் செய்தால், மன அழுத்தம், ஞாபகமறதி, உறக்கமின்மை உள்ளிட்ட பிரச்சினைகள் தீரும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உடலில் ஏற்படும் வலி உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, உடலில் மசாஜ் செய்து கொள்கின்றனர். அதேபோன்று, முகத்தில் மசாஜ் செய்தால், மன அழுத்தம், ஞாபக மறதி, உறக்கமின்மை போன்ற பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளலாம் என்று பிரிட்டன் மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த முறைக்கு 'பேஷியல் ரெப்பிளக்சாலஜி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

மசாஜ், சீனாவின் அக்குபஞ்சர் மருத்துவமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.மசாஜ் செய்வதன் மூலம், உடலின் முக்கிய மையங்கள் தூண்டப்பட்டு, இரத்த சுழற்சி சீராகிறது. அதேபோன்று முகத்தில் மசாஜ் செய்வதன் மூலம் உடலில் இரத்த ஓட்டம் சீராகி பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுகிறது.

முகத்தில் எண்ணற்ற இரத்த நாளங்கள் உள்ளன. உடலில் உள்ள முக்கிய பகுதிகளை கட்டுப்படுத்தக் கூடிய இரத்த நாளங்களும் இதில் அடக்கம். எனவே, முகத்தில் சீராக மசாஜ் செய்யும்போது, அந்த இரத்த நாளங்கள் தூண்டப்பட்டு , இரத்த ஓட்டம் சீராகிறது. இதனால் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகள், ஞாபகமறதி , உறக்கமின்மை உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. தற்போது பிரிட்டனில் 35 பேர் பேஷியல் ரெப்பிள்சாலஜி பயிற்சி பெற்று வருகின்றனர். (ஸ்ரீ)

## போலி மாணிக்கக் கற்களை விற்பனை செய்து நிதிமோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சட்டவிரோதமான முறையில் போலி மாணிக்கக் கற்களை விற்பனை செய்து நிதி மோசடியில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த இவரிடமிருந்து பலவிதமான போலி மாணிக்கக் கற்கள் மீட்கப்பட்டதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதையலில் இருந்து பெறப்பட்ட அதி உயர் பெறுமதிகளைக் கொண்ட மாணிக்கக் கற்கள் என மிகைப்படுத்திக் கூறி பட்டை தீட்டப்பட்ட போலியான கற்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் சந்தேக நபர் ஈடுபட்டதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அதேவேளை இந்தப் போலியான கற்களை அவர் 2 இலட்சம் தொடக்கம் 5 இலட்சம் வரையான விலைகளுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கமன்விலவில் இருந்து அனுராதபுரத்துக்கு விற்பனை செய்வதற்காக பேருந்தில் எடுத்துச் செல்லப்பட்ட 7 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிகாரி ஜெயந்த கமகேக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தளம் - அனுராதபுர பிரதான வீதியின் பகல மரஹவேவ பிரதேசத்தில் நேற்று இந்தக் கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் முறுகல் நிலை

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வரையறுக்கப்பட்டளவு அமைச்சுப் பதவிகளே வழங்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரதான அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுக்கொள்வதில் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும், சிரேஷ்ட உறுப்பினர் சேகுதாவூத்திற்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நூர்தீர் மசூர் பிரதி அமைச்சுப் பதவியொன்றைக் கோரி நிற்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஒரு அமைச்சுப் பதவியும் இரண்டு பிரதி அமைச்சர் பதவிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிபந்தனையின்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சிக்குள் பிளவு ஏற்படுவதனை தவிர்க்கும் நோக்கில் கட்சித் தலைவர் ஹக்கீம் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மக்கள் வங்கியின் அனுசரணையுடனான தரம் -5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தினரால் நடத்தப்பட்ட தரம் 5 முன்னோடிப் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/ உடுவில் மகளிர் கல்லூரியில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் சு. இராசமனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.இப்பரீட்சையில் வலய மட்டம், கோட்ட மட்டத்தில் தெரிவான மாணவர்களின் விபரம் வருமாறு,

**வலயமட்டத்தில் தெரிவானோர்**

சா.மதுஷாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), தே.யுபீதரன்(யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தி.), தி.கில்லறி அன்ரனைஸ் (யா/இளவாலை றோ.க. ஆண்கள் பாட), வ.பவிதரன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), பா.தாரணி (யா/உடுவில் மகளிர் கல்லூரி)

**கோட்ட மட்டத்தில் தெரிவானோர்**

**சங்கானை**

அ.அருஷாந் (யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.) ச.கீர்த்தனா(யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.பா), எஸ்.நிலோத்தமன்(யா/யாழ்ப்பாணக் கல்லூரி), தி.சுகந்தினி ( யா/வட்டு மத்திய கல்லூரி), நி.டிஷான் (யா/ அராலி சரஸ்வதி ம.வி.), ர.சஞ்சயன் (யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.), த.திருக்குமரன் (யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம்), த.கேமதர்சினி (யா /அராலி கிழக்கு அ.மி.த.க.பா.), ம.கவீசன் ( யா/வட்டு இந்துக் கல்லூரி)

**உடுவில்**

ம.நிவேதா ( யா/உடுவில் மகளிர் கல்லூரி), ம.கம்சிகா,ச.குகாயினி(யா/சுன்னாகம் நாகேஸ்வரி வி),ம.டிறோஜா, அ.கஜானன் , ஜெ.சஜீபன், சி.தர்சிக்கா, அ.ஜொகான் ஜீவதாஸ், (யா/உடுவில் மகளிர் கல்லூரி)

**சண்டிலிப்பாய்**

செ.கஜப்பிரியன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ர.அகிலா (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), பு.பிரவின்(யா/மானிப்பாய் விவேகானந்தா வி.), நி.ம.ஜெனரல் சனோஜன் (யா/சில்லாலை றோ.க. பாட சாலை) , வி.சாத் வீகா, க.கீர்த்தனா (யா/சத்தியசாயி பாடசாலை), த. டிலக்ஷனா(யா/சிந்மய பாரதி வித்தியாலயம்), ஞா. ஞானியா(யா/பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரி)

**- தெல்லிப்பழை**

சி.சர்மிலன் (யா/மகாஜனாக் கல்லூரி), ஸ்ரீ.நிலானி (யா/வசாவிளான் ம.ம.வி.), வி. தர்சனா(யா/அருணோதயாக் கல்லூரி), ம.துஷாரா (யா/ மகாஜனாக் கல்லூரி), த.நிலக்சனா (யா/வசாவிளான் ம.ம.வி.), பா.சானு ( யா/மகாஜனாக் கல்லூரி), தே.சங்கரன் , கு.மஜீபன் (யா/வசா விளான் ம.வி.), க. சஜீவரன் (யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்). (ஸ்ரீ)

## பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றுமாறு பணிப்பு

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தையிட்டு கொழும்பில் தொங்கவிடப்பட்டிருந்த அலங்கார தோரணங்கள் , பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுமாறு அரசாங்கத்தினால் பணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று திங்கட்கிழமை நள்ளிரவிலிருந்து நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமைக்குள் இவற்றை அகற்றிவிடுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சு,இளைஞர் விவகார அமைச்சு என்பன பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து கொழும்பு மாநகரசபை மற்றும் அதனோடு தொடர்புடைய சகல பிரிவினரிடமும் இப் பணியினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

முதலில் தூசியைக் கிளப்பி விடுகின்றோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம். ~ பிஷப் பர்க்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசியல் மயிர்க்கொட்டி என்றால் அரசாங்கம் வண்ணத்துப்பூச்சி

அரசு வேறு, அரசியல் வேறு. அரசு சட்டங்களை அமுலாக்குவது, பாதுகாப்பை வழங்குவது, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது, நாட்டை வளமாக்குவது, தேவையான சட்டவாக்கங்களை உருவாக்குவது என்றவாறு தனது பணியை ஆற்றும்-ஆற்ற வேண்டும்.

அரசியல் என்பது திருகுதாளத்துடன் தொடர்புபட்டது.பொய்யுரைப்பது, சுத்துமாத்துச் செய்வது, உள்ளதை இல்லை என்பது, இல்லாததை இருப்பதெனக் கூறுவது, ஊழல் புரிவது, செல்வாக்கைப் பிரயோகிப்பது, சிலவேளைகளில் நியாயத்திற்காக போராடுவது என்ற பணிகளோடு தொடர்புபட்டதாகும்.

ஆக, அரசியல் என்பது மயிர்க்கொட்டி போன்றது. அரசு என்பது வண்ணத்துப்பூச்சி போன்றது.

மயிர்க்கொட்டி மிகவும் மோசமானது. ஆனால் அந்த மோசமான மயிர்க்கொட்டியில் இருந்து தான் பார்வைக்கும் பறப்பிற்கும் அழகான வண்ணத்துப்பூச்சி தோற்றம்பெறுகிறது.

மயிர்க்கொட்டியை எதிர்ப்பவர்கள்-விரும்பாதவர்கள் வண்ணத்துப்பூச்சியை ஒருபோதும் எதிர்ப்பதில்லை.ஏற்க மறுப்பதும் இல்லை.மாறாக அதனைப் பிடித்துப் பார்த்து மகிழவே முற்படுவர். இதற்கு காரணம் மயிர்க்கொட்டியின் எந்த இயல்பையும் வண்ணத்துப் பூச்சி கொண்டிருப்பதில்லை.

வண்ணத்துப்பூச்சியிலும் 'சுணைத்தல்' மிகக்குறைந்தளவேனும் இருந்திருக்குமாயின் அதற்கு அந்தப் பெயரே வந்திருக்காது.

எனவே அரசும் அவ்வாறுதான் இருக்க வேண்டும்.அதாவது மிகவும் மோசமான அரசியலில் இருந்து அரசாக உருமாற்றம் பெறும் போது அங்கு அரசியலின் எந்த இயல்பும் இருத்தலாகாது.

அரசில் அரசியல் இருக்குமாயின், அது மிக மோசமானதாகவே அமையும்.மயிர்க்கொட்டி, வண்ணத்துப்பூச்சியாக மாறுவது போல வண்ணத்துப்பூச்சி மீளவும் மயிர்க்கொட்டியாக மாறினால், அதில் ஏதேனும் அர்த்தம் இருக்குமா?

ஆ! கடவுளே, அழகான வண்ணத்துப்பூச்சிக்கு மீண்டும் ஏன் மயிர்க்கொட்டியின் தோற்றத்தை கொடுத்தாய் என்று கவலை கொள்ளவே செய்யும்.அதற்கு ஒப்பாகவே அரசாங்கத்தில் அரசியல் கலக்கும் விடயமும் இருக்கும்.

எதுவாயினும் அரச நிர்வாகம் வண்ணத்துப்பூச்சி போல இருக்கட்டும். அதில் மயிர்க் கொட்டிகள் கலவாதிருப்பதை உறுதி செய்வது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்ற அனைவரதும் கடமையாகும்.

இதற்காக சபைகள், திணைக்களங்கள், அரச நிர்வாகங்களில் என்ன நடக்கின்றது, அரசியல் நுழைகின்றதா? என்பதை கவனிக்கும் பொறுப்பும் அவர்களுக்குரியதாகும்.அதிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

# புதிய அமைச்சரவை நாளை பொறுப்பேற்பு; டி.எம்.ஜயரட்ணவே தொடர்ந்தும் பிரதமர்

புதிய அமைச்சரவை நாளை பொறுப்பேற்க உள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.டி.எம்.ஜயரட்ணவே தொடர்ந்தும் பிரதமராக பதவி வகிப்பார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது நாளை புதிய அமைச்சரவை அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பிரதி அமைச்சுப் பதவிகளை வகித்து வரும் ஏழு அல்லது எட்டு பேர் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இதற்கமைய டிலான் பெரேரா, மஹிந்தானந்த அளுத்கமகே, ரீ.பி.ஏக்கநாயக்க ஆகியோருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது..

அனுபவம் மற்றும் சேவை மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இப்பதவிகள் வழங்கப்படவுள்ளன. இதேவேளை புதிதாக ஆறு அமைச்சுக்கள் உருவாக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக் காலத்திலும் டி.எம்.ஜயரட்ணவே தொடர்ந்து பதவியில் நீடிப்பார் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன



உள்ளிட்ட பலர் பிரதமர் பதவிக்காக போட்டியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் தவணையிலும் நீங்களே பிரதமராக நீடிப்பீர்கள் என ஜனாதிபதி டி.எம். ஜயரட்ணவிற்கு அறிவித்ததாகவும் மலைநாட்டு மக்கள் மீது ஜனாதிபதி கொண்டிருக்கும் அபிமானம் இதன் மூலம் வெளிப்படுவதாக டி. எம்.ஜயரட்ண தெரிவித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசரகால கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் நடைபெறும்.இக்கலந்துரையாடலுக்கு அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(ச-29)

## பாஸ் நடைமுறை நீக்கப்படாததால் கடற்றொழிலாளர்கள் சிரமம்

(இளவாலை)

யாழ்.குடாநாட்டில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த பாஸ் நடைமுறை நீக்கப்பட்ட போதும் குசுமன்துறை துறைமுகத்தில் மீன்பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை அகற்றப்படவில்லை.

மேற்படி துறைமுகத்தில் வலி.தென்மேற்கு, வலி.வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களான மாரீசன்கூடல், சீந்திப்பந்தல், போயிட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை மீன்பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை யாழ்.குடாநாடு முழுவதும் அகற்றப்பட்ட நிலையில் கடற்படையினர் இவர்களை பாஸ் இன்றி கடலுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து இத் தடையினை நீக்கித் தர வேண்டும் என அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-32)

## பலாலியில் விசேட பூஜை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு இன்று பலாலியிலுள்ள சந்தன்மேரி தேவாலயத்தில் விசேட பூஜைகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும் இப்பூஜை வழிபாடுகளுக்கு பலாலி பாதுகாப்புத் தலைமையகம் முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கவுள்ளதாக பலாலி படைத் தலைமையக ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.இப் பூஜை நிகழ்வுகளில் பாதுகாப்புப் படை களின் தலைமையக பிரிகேடியர் வி.சி. ஜே.ஏ.எப்.றோற்றிகோ மற்றும் படை வீரர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ச)

# ஆனையிறவு உப்பள ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை

வட பிராந்திய ஆனையிறவு உப்பள முன்னைய லங்கா சோல்ட் லிமிட்டெட் நிரந்தர ஊழியர்களுக்கு தொழில் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ள நிலுவைச் சம்பளம்,பணிக்கொடை மற்றும் தொழில் இழப்புக்கான நட்டஈடு ஆகிய சட்டரீதியான கொடுப்பனவுகள் 50 ஊழியர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி ஊழியர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் கூடிய விரைவில் வழங்குவதற்கு தொழில் திணைக்களம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

எனவே இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கத்திற்கு (C.M.U) தங்கள் வதிவிட விபரங்களின் முகவரிகளை அனுப்பாதவர்கள் உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

லங்கா சோல்ட் லிமிட்டெட் ஆனையிறவு(cmu) கிளையின் செயலாளர் வே.சுந்தரலிங்கம் தொழில் திணைக்களத்தால் வழங்கப்படும் முன்னைய லங்கா சோல்ட் லிமிட்டெட் கொடுப்பனவு யாவற்றுக்கும் ஊழியர்களை அடையாளம் கண்டு உறுதிப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே (லங்கா சோல்ட் லிமிட்டெட் (வ.பி) முன்னாள் உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்கள் இருப்பின் அவ்வாறான உறுப்பினர்களின் சட்டபூர்வமான பின்னுருத்தாளிக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர்களது தற்போதைய முகவரிகளையும் அறியத்தருமாறும்,பொதுச்செயலாளர் பாலா தம்பு அறிவித்துள்ளார்.

தங்களின் தகவல்களை இல.3,22-ம் ஒழுங்கை கொழும்பு-03 அல்லது தொலைநகல் இல.0112434025 அல்லது gscmu@sltnet.lk என்ற இ-மெயில் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



ஒன்று நான் சொல்லவேண்டும். இந்தியாவில் உருவ வழிபாடு என்பது பயங்கரமான ஒன்றல்ல. விலை மகளிரை உருவாக்கும் இடமும் அல்ல. உயர்ந்த ஆன்மீக உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு, பக்குவப்படாதவர்களின் முயற்சிதான் உருவ வழிபாடு. இந்துக்களிடம் தவறுகள் உண்டு, சில வேளைகளில் விதி விலக்குகளும் உண்டு. ஆனால் ஒன்றைக் கவனியுங்கள். அவர்கள் தங்கள் உடல்களை வருத்திக் கொள்வார்களே தவிர, அடுத்தவனின் கழுத்தை அறுக்கமாட்டார்கள், இந்து மதவெறியன் தன்னை தீயில் கொளுத்திக் கொள்வானேயன்றி பிறரையல்ல. சூனியக்காரிகள் கொளுத்தப்பட்டதற்கு எப்படிக் கிறிஸ்தவ மதம் பொறுப்பில்லையோ, அதேபோன்று இதற்கு இந்து மதம் பொறுப்பல்ல.

இந்துவிற்கு, உலகின் எல்லா மதங்களும், பலவித நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் உள்ள பல்வேறு ஆண்களும் பெண்களும் ஒரே இலக்கை நோக்கிச் செய்கின்ற பயணம் தான். சாதாரண உலகியல் மனிதனிடம் கடவுளை வெளிப்படச் செய்வது தான் எல்லா மதங்களின் நோக்கமுமாகும். அவர்கள் அனைவருக்கும் எழுச்சியை ஊட்டுபவர் ஒரே கடவுள் தான். அப்படியானால் இத்தனை மாறுபாடுகள் எல்லாம் வெளித்தோற்றமே என்கிறான் இந்து. வெவ்வேறு சூழ்நிலைகளுக்கும் பல்வேறு இயல்புகளுக்கும் ஏற்ப தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளும் ஒரே உண்மையில் இருந்து தான் இந்த மாறுபாடுகள் எழுகின்றன.

# பீகாரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 குழந்தைகள் உட்பட 7 பேர் பலி

பீகார் தேர்தலை சீர்குலைக்க நக்சலைட்டுக்கள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகள், குண்டுகளைப் பொலிஸார் அகற்றி அவற்றை செயலிழக்கச் செய்வதற்காக வயற் பகுதியில் வைத்திருந்தனர்.


அவை நேற்று வெடித்துச் சிதறியதில் 5 குழந்தைகள் உட்பட 7 பேர் உடல் சிதறி பரிதாபமாக இறந்தனர்.

பீகாரில் சட்டசபைத் தேர் தல் கடந்த மாதம் 21 ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் வரை 6 கட்டங்களாக நடந்தது.

நக்சலைட் அபாயம் உள்ள பகுதிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.அந்த இடங்களில் பாதுகாப்புக் கருதி மாலை 3 மணியுடன் வாக்குப் பதிவு நிறுத்தப்பட்டது.

தேர்தலில் வாக்களிக்கக்கூடாது என மக்களுக்கு நக்சலைட்டுகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.அதையும் மீறி மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.ஒரு சில இடங்களில் வாக்குச் சாவடி மையங்களுக்குள் புகுந்து நக்சலைட்கள் தாக்குதல் நடத்தினர். தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால் பெரியளவில் பாதிப்புகள் இன்றி 5 கட்டத் தேர்தல்களும் நடத்தி முடிக்கப்பட்டது.

6 ஆவது மற்றும் கடைசிக் கட்டமாக 26



தொகுதிகளில் வாக்குப் பதிவு நேற்று முன்தினம் நடந்தது. இவற்றில் 18 தொகுதிகளில் நக்சல் அபாயப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. வாக்களிக்கச் சென்றால் அசம்பாவிதங்களை சந்திக்க நேரிடும் என்று நக்சலைட்கள் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இது பற்றி தகவல் கிடைத்ததும் கண்ணிவெடிகளை உடனடியாக கண்டுபிடித்து அகற்ற உத்தரவிடப்பட்டது. இதற்கான நடவடிக் கைகளில் பொலிஸார் இறங்கினர். கயா மாவட்டம் லோண்டா கிராமத்தில் கண்ணிவெடிகளை பொலிஸார் செயலிழக்கச்செய்த போது அவை எதிர்பாராத விதமாக பயங்கர சத்தத்துடன் வெடித்தன. இதில் 2 பொலிஸார் உடல் சிதறி பலியாயினர். மூன்று நிருபர்கள் உட்பட 9 பேர் படுகாயமடைந்தனர். பாராசூட்டி பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி புகையிரதப் பொலிஸ் ஒருவர் காயமடைந்தார். (ஸ்ரீ)

## தமிழக அகதிகளுக்கு இலங்கை பிறப்புச்சான்றிதழ்

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம்,அகதிகள் மறு வாழ்வுத் துறை,இலங்கை அகதிகள் மறுவாழ்வுக் கழகம்,மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இலங்கை அரசின் பிறப்புச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான சிறப்பு முகாம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# அதிநவீன ஏவுகணைகளை தயாரிக்க இந்திய மத்திய அரசு திட்டம்

(ஐதராபாத்)

இன்னும் ஐந்தாண்டுகளில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஏவுகணைகளை உற்பத்தி செய்வது ஒலியை விட ஆறு மடங்கு வேகமாகச் செல்லும் விமானங்களின் இன்ஜின்களை பரிசோதிக்கும் வசதிகள் உருவாக்குவது போன்ற திட்டங்களுக்காக மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேசத் தலைநகர் ஐதராபாத்தில் மூன்று நாள் சர்வதேச விமானப் போக்குவரத்து மாநாடு கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இம்மாநாட்டில் விமானப் போக்குவரத்து தொடர்பான கண்காட்சியும் இடம்பெற்றுள்ளது.

விமான வடிவமைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அத்துறை கொள்கை வடிவமைப்பாளர்கள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். ஐதராபாத்தில் உள்ள மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (டி. ஆர். டி.ஓ) நவீன ரக ஏவுகணைகளை தயாரிக்கும் மையத்தின் இயக்குனர் வி.கே.சரஸ்வத் இம் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

அப்போது செய்தியாளர்களுக்கு அவர்

**பாரதச் செய்திகள்**

வழங்கிய பேட்டியில், ஐதராபாத் டி.ஆர்.டி.ஓ மையம் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஏவுகணைகளைத் தயாரிப்பதற்காக 600 கோடி ரூபாயில் விரிவாக்கப் பணிகளுக்காக திட்டமிட்டுள்ளது. ஒலியை விட ஆறு மடங்கு செல்லும் ஹைபர் சானிக் விமானங்களின் இன்ஜின்களை பரிசோதிப்பதற்கான மையங்களை அமைப்பதற்காக 300 கோடி ரூபாய் முதல் 350 கோடி ரூபாய் வரை செலவழிக்கப்படும்

பாரத் டைனமிக்ஸ் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள தொகை ரேடியோ ப்ரிக்வின்சி பரிசோதனை மையம் அமைப்பதற்கு செலவிடப்படும். ஹைபர்சானிக் இன்ஜின்களைப் பரிசோதனை செய்யும் வசதி உலகில் சில நாடுகளில் தான் உள்ளது. இன்னும் மூன்றரை ஆண்டுகளில் அந்த வசதி ஐதராபாத்தில் அமைக்கப்படும்

(ஸ்ரீ-2)

# மும்பைத்தாக்குதல் சம்பவத்தில் அமெரிக்கா இரட்டை வேடம்

(மும்பை)

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் இரட்டை வேடம் போடுவதை நிறுத்திக்கொண்டு தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானை வற்புறுத்த வேண்டும் என தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சமீபத்தில் இந்தியாவில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். மும்பை வந்திறங்கிய அவர் பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளான தாஜ்ஹோட்டலில் தங்கினார். அப்பொழுது தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் நினைவாக ஹோட்டலில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதைத்தொடர்ந்து தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினர் சிலர் மத்தியில் ஒபாமா உரையாற்றுகையில், அப்பொழுது தாக்குதலின் போது சிறப்பாக பணியாற்றியவர்களை பாராட்டி நினைவு கூர்ந்தார்.

அங்கு கூடியிருந்த குடும்பத்தினர்களுடன் சிறிது நேரம் உரையாடினார். இந்த நிலையில் தாஜ்ஹோட்டலில் ஒபாமா உரையாற்றிய போது பாகிஸ்தான் குறித்து அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. இது தாக்குதலில் பலியான குடும்பத்தினர் மத்தியிலும் மும்பை மாநகர மக்கள் மத்தியிலும் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் பயங்கரவாதி அஜ்மல் கசாபை உயிருடன் பிடிப்பதற்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த மும்பை மாநகர பொலிஸின் மூத்த பொலிஸ் துக்காராம் ஓம்பலேயின் குடும்பத்தினர் ஒபாமா நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைக்கப்படவில்லை.

இந்த நிலையில் ஒபாமா வருகை குறித்து கருத்துத்தெரிவித்த ஓம்பலேயின் சகோதரர் கூறுகையில்,

பயங்கரவாத கொள்கையில் இரட்டை வேடம் போடுவதை முதலில் அமெரிக்க நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு ஆதரவாக பேசும் போது பயங்கரவாதத்தை ஒடுக்க இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவோம் என்று அமெரிக்கா முழக்கம் இடுகிறது.

அதே சமயம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பாகிஸ்தானுக்கு பெருமளவு ஆயுதங்கள்,பீரங்கிகள் ,போர் விமானங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்குகிறது. இதிலிருந்து பயங்கரவாதக் கொள்கையில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுவது தெரியும் என்றார்.

இது தவிர ஒபாமாவின் பேச்சுக்குறித்து கருத்துத் தெரிவித்த மும்பை வாசிகள் சிலர் அமெரிக்காவின் கொள்கைகளை கடுமையாக தாக்கிப் பேசினார்.

கால்சென்டர் ஊழியரான ஹர்ஷத் கனடே கூறுகையில்,ஒபாமாவின் பேச்சு நன்றாக இருந்தது. ஆனால் அவர் பாகிஸ்தான் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது.

பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை நிறுத்திக்கொள்ளுமாறு அவர் பாகிஸ்தானை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று கூறினார்.

இதேபோன்று வியாபாரி சத்தியநாராயணன் கூறுகையில் ,அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனைத்துவழிகளிலும் உதவி புரிகிறது. இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத செயல்களை அமெரிக்கா நினைத்தால் எளிதில் தடுக்க முடியும்.

ஆனால் அமெரிக்காவின் செயற்பாடுகள் இந்தியர்களை முட்டாளாக்குவது போன்று உள்ளது என்றார். (ஸ்ரீ-2)



ஐதராபாத் என்சிசி பாடசாலையின் நிறுவுனர் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற மாணவர்களின் சாகச நிகழ்வைப் படத்தில் காணலாம்.

# இளைஞர்களும் மாணவர்களும் அரசியலுக்கு வரவேண்டும்

## ராகுல் காந்தி அழைப்பு

இளைஞர்களும் மாணவர்களும் அதிக அளவில் அரசியலுக்கு வரவேண்டும் என்றும் குறிப்பாக பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் வரவேண்டும் என்றும் ராகுல்காந்தி வலியுறுத்தினார்.

ஜார்க்கண்ட் மாநிலம் தும்கா நகரில் காங்கிரஸ் கட்சியின் மாணவர் அமைப்பான இந்திய தேசிய மாணவர் பேரவையின் மாநாடு நடந்தது. மாநாட்டில் காங்கிரஸ் கட்சி யின் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி பங்கேற்றார்.

மேலும் ராஞ்சி,ஹஜாரிபாக் உள்ளிட்ட இடங்களில் மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார். ராகுல் காந்தியுடன் அகில இந்திய மாணவர் பேரவைத் தலைவர் ஹெபி ஹேடன், முன்னாள் தலைவர் மீனாட்சி நடராஜன், கட்சியின் ஜார்க்கண்ட் மாநில பொறுப்பாளர் கேசவ்ராவ் ஆகியோரும் அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். மாநாட்டில் ராகுல் பேசியதாவது, இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து முக்கிய பங்காற்ற வேண்டும். குறிப்பாக பழங்குடி இனமானவர்கள் மற்றும் இளைஞர்களை அரசியலுக்கு வருமாறு அழைக்கிறேன். தற்போது தலைவர்கள் திணிக்கப்படுவதில்லை. நம்முடைய தொண்டர்களில் இருந்தே தலைவரை உருவாக்கும் வழக்கத்தை தொடங்கி இருக்கிறோம்.

தொண்டர்களை முதன்மைப்பதவியில் அமர்த்தும் ஒரே இயக்கம் நம்முடைய காங்கிரஸ் இயக்கம் மட்டும் தான். உங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளை நீங்கள் தொடங்க வேண்டும். ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஊழலே முக்கிய காரணமாக இருக்கிறது. அந்த சமூக பிசாசை ஒழிப்பதற்கு இளம் தலைவர்கள் உதவவேண்டும் என்றார். (ஸ்ரீ)

# இஷாந்தின் மிரட்டலில் நியூசிலாந்து சுருண்டது; சேவாக்கின் அதிரடியில் இந்திய அணி எழுந்தது




(நாக்பூர்)

சேவாக் – காம்பீர் சிறப்பான ஆரம்பத்தை வழங்க இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களை எடுத்தது.

முன்னதாகத்துடுப்பெடுத்தாடியநியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 193 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் மூன்றாவது மற்றும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் நாக்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு இஷாந் சர்மாவின் பந்துவீச்சில் மக்குலம் 40, மக்கேய் 05 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இறுதியில் சௌத்தி தன் பங்கிற்கு 38 ஓட்டங்களை எடுக்க நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 193 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் சௌத்தி 68 பந்துகளில் (02 பவுண்டரிகள் 03 சிக்ஸ்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் மார்டீன் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இஷாந் சர்மா 4 விக்கெட்டுக்களையும் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் சிறிசாந் 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர் – சேவாக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சேவாக் 50 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்தினார்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 113 ஓட்டங்களைப் பகிர்ந்தபோது வீரேந்திர சேவாக் 73 பந்துகளில் (12 பவுண்டரிகள் ஒரு சிக்ஸ்ஸர் அடங்கலாக) 74 ஓட்டங்களைக் குவித்து விக்டோரியின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டிராவிட் நிதானமாக துடுப்பெடுத்தாட மறுமுனையில் காம்பீர் 90 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி 2 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 79 ஓட்டங்களை சேர்த்தபோது கௌதம் காம்பீர் 127 பந்துகளில் (12 பவுண்டரிகள் அடங்கலாக) 78 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த டெண்டுல்கர், டிராவிட்டுடன் இணைந்து நிதானமாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டம் இந்திய அணியை பலமான நிலைக்கு அழைத்துச் சென்றது.

இதில் டிராவிட் 115 பந்துகளில் அரைச்சதம் கடக்க இந்திய அணி 250 ஓட்டங்களை எட்டியது. மறுமுனையில் டெண்டுல்கரும் 117 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்திசெய்தார்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ராகுல் டிராவிட் 69, சச்சின் டெண்டுல்கர் 57 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி, சௌத்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

**சச்சின் டெண்டுல்கர் 50 ஆவது சதமடிப்பாரா?**

நேற்றைய ஆட்டநேர முடிபில் சச்சின் டெண்டுல்கர் 57 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்துள்ள நிலையில் மூன்றாம் நாள் ஆட்டமான இன்று தனது 50 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்து சாதனை படைப்பாரா என்பதுதான் இரசிகர்களின் எதிர்பார்ப்பு.



## கார்லஸ் மோயா ஓய்வு


சர்வதேச டென்னிசிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் ஸ்பெய்னின் முன்னணி டெனிஸ் வீரர் கார்லஸ் மோயா.

கடந்த 1998 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார். இதுவரை 20 சர்வதேச டென்னிஸ் தொடர்களில் பட்டம் வென்றுள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு டென்னிஸ் தரவரிசையில் நம்பர் -1 இடத்தைக் கைப்பற்றிய முதல் ஸ்பெயின் வீரர் என்ற பெருமை பெற்றவர்.

தற்போது 34 வயதாகும் இவர் சமீப காலமாக கால்வலியால் அவதிப்பட்டு வந்தார். இதனையடுத்து சர்வதேச டென்னிசிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

# டிவில்லியர்ஸ் இரட்டைச்சதம்; தென்னாபிரிக்க அணி பலம்



(அபுதாபி)

டிவில்லியர்ஸ் இரட்டைச் சதம் அடித்து சாதிக்க தென்னாபிரிக்கா அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 584 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பாகிஸ்தான் – தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் நேற்று முன்தினத் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டிவில்லியர்ஸின் இரட்டைச் சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 584 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் எ.பி.டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 418 பந்துகளில் (23 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 278 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 105 ஓட்டங்களையும் பௌச்சர் 45 ஓட்டங்களையும் மோனி மோர்க்கல் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தனது முதலாவது டெஸ்டில் விளையாடிய தன்வீர் அகமெட் 28 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 120ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் அப்துர் ரீமான் 2 விக்கெட்டுக்களையும் முகமெட் ஹபீஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை இழந்து 59 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஷார் அலி 34 ஓட்டங்களையும் தௌபிக் குமார் 16 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஸ்ரைன் ஒருவிக்கெட்டை வீழ்த்தினார்.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

**டிவில்லியர்ஸின் வாய்ப்பை அணித்தலைவர் சிமித் பறித்தார்**

இப்போட்டியில் ஏ.பி.டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 278 ஓட்டங்களை எடுத்தார். இது டிவில்லியர்ஸ் பெற்ற இரண்டாவது டெஸ்ட் இரட்டைச்சதமாகும்.

எனினும் டிவில்லியர்ஸிற்கு முதலாவது முச்சதத்தை பெறும் வாய்ப்பு இருந்தது. எனினும் அணித்தலைவர் சிமித் ஆட்டத்தை இடைநிறுத்தி அந்த வாய்ப்பை பறித்து விட்டார்.

இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் நாளை கொழும்பில் நடைபெறுகிறது. இப் போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ் ஹெயில் பயிற்சிக்காக மைதானம் செல்வதைப் படத்தில் காணலாம்.



# புதிய தீர்வுத் திட்டத்துடன் இந்.மீனவர்கள் இலங்கைக்கு

(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு தீர்வுத் திட்டத்துடன் இந்திய மீனவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று கொழும்பை சென்றடைகிறது

இந்திய- இலங்கை கடற்பரப்பில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் இந்தியத் தரப்பிடமிருந்து ஒரு திட்டம் முன்வைக்கப் படுகின்றது என்று இந்தியக் குழுவிற்கு தலைமையேற்றுச் செல்லும் ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவரான தேவதாஸ் தெரிவித்தார்.

இதன்படி வருடத்துக்கு 70 நாட்கள் இந்திய மீனவர்களும் மீதமுள்ள 295 நாட்கள் இலங்கை மீனவர்களும் இந்தக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் கூறுகிறார்.

இத்திட்டத்திற்கு இரு நாட்டு மீனவர்களும் உடன்பட்டுள்ளதாகவும் இதற்கு அரசு ரீதியிலான ஒரு அங்கீகாரத்தையும் உறுதிப்பாட்டையும் பெறும் நோக்கிலேயே தமிழக மீனவர்கள் இலங்கை பயணமாகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான கால கட்டத்தில் இலங்கை மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலும் இரு நாட்டு மீனவர்களிடையே ஒரு முழுமையான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் தமிழக மீனவர்கள் 70 நாட்கள் கடலுக்குச் செல்லும் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் எனவும் தேவதாஸ் கூறுகிறார்.

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் 70நாட்களில் இலங்கை மீனவர்கள் கடற்பரப்புக்கு வரக்கூடாது எனவும்,

அதேபோல இலங்கை மீனவர்கள் கடலில் இருக்கும் 295 நாட்களும் தமிழகம் உட்பட இந்திய மீனவர்கள் இலங்கை- இந்திய கடற்பரப்பில் நுழையமாட்டார்கள் எனவும் தமிழக கடலோர விசைப்படகு மீனவர் சங்கத்தின் ஆலோசகராகவும் இருக்கும் தேவதாஸ் தெரிவித்தார். (ச-5)

# கார்த்திகைத் தீபம் ஏற்றியவர்கள் இராணுவ விசாரணைக்கு உட்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் புனித நாளான நேற்று இரவு கார்த்திகைத் தீபம் ஏற்றிய பலர் இராணுவத்தினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதுடன் அவர்களின் கார்த்திகை தீபத்தினை அகற்றுமாறும் அவர்கள் பணித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் குடாநாடு முழுவதிலும் பரவலாக இடம்பெற்றுள்ளன. நேற்றிரவு கார்த்திகை தீபம் ஏற்றிய பிரபல சட்டத்தரணி ஒருவரும் இராணுவத்தினரின் மிரட்டலுக்கு உட்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் அவர் ; தனது வீட்டுக்கு முன்னால் கார்த்திகை தீபம் ஏற்றிக்கொண்டிருந்து போது அங்கு விரைந்து சென்ற இராணுவத்தினர் கார்த்திகை தீபத்தை அகற்றுமாறு கூறியுள்ளனர்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த சட்டத்தரணி இது குறித்து, இந்துக்களின் புனித நாள். அதன் போது நாங்கள் தீபம் ஏற்றுவோம் எனக் கூறியுள்ளார்.

எனினும் அதனை ஏற்றுக் கொள்ளாத இராணுவத்தினர் அவரின் தீபத்தினை தூக்கிச் சென்றுள்ளனர். இதேபோன்று கொழும்புத்துறை மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (ச)

# விபத்துச் சம்பவத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியும்–மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.00 மணியளவில் திருநெல்வேலி–காளி கோவிலடியில் இடம்பெற்றது.

குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற சு.காண்டீபன் (வயது 24) என்ற இளைஞனே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மானிப்பாயைச் சேர்ந்த ஆர்.அமுதன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-6)

## தமிழ்க்...

இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கலந்து கொள்ளவுள்ள யாழ்.இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலக திறப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## அரச உத்...

கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் அனைத்து பணியாளர்களது வேதனமும் 9 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க வேண்டும் என ஜே.வி.பியின் ஆதரவான தொழிற்சங்க மத்திய நிலையம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தது.

எவ்வாறாயினும் இந்த கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காவிடில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாளைய தினம் கூடி ஆராயவுள்ளதாக அந்த தொழிற்சங்க மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (ச-5)

## அட்மிரல்...

தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், தற்போது வசந்த கரன்னகொட தென் கொரியாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

வன்னிப் போரின் போது முக்கிய பங்கு வகித்த படை உயரதிகாரிகளை வெளிநாட்டு இராஜதந்திரிகளாக இலங்கை அரசாங்கம் அண்மைக்காலங்களில் நியமித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2004ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்ற போது லலித் வீரதுங்கவை பிரதமரின் செயலாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## முப்படையினருக்கும்...

ஆயிரத்து 600க்கும் அதிகமான படைத்தரப்பினர் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்படைக் கப்பல்கள், விமானப் படையின் விமானங்களும் இப்பயிற்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை படைத்துறையின் சகல மட்டங்களிலும் முப்படைகளினதும் கட்டளை ஆளுமைகளை பரிசோதிப்பதற்காகவே இக் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சு கூறியுள்ளது.

படைத்தரப்பின் தீர்மானங்களை மேற்கொள்ளுதல், ஏனைய சகோதர படைகளுடனான கூட்டு நடவடிக்கையில் தமக்கு விதிக்கப்பட்ட இலக்கை அடைதல்,பரஸ்பரபுரிந்துணர்வு, சொந்த ஆளுமைகள் மற்றும் வரைறைகள் என்பவற்றை இனங்காணுதல் முதலானவற்றை பரிசோதிப்பதற்காக இக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பாகிஸ்தானுடன் இல...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய இரண்டாவது ஆட்சிக் காலத்துக்காக கடந்த வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளும் முதலாவது ஜனாதிபதி பாகிஸ்தான் ஜனாதிபதியாகவே இருப்பார்.

எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்புக்கு வரும் பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அஹமத் முக்தார், வெளிவிவகார அமைச்சர் ஷா முகமத் குவார்ஸி ஆகியோரும் இணைந்து கொள்வார்கள் என பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையில் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வது தொடர்பாக இந்த விஜயத்தின் போது முக்கியமாக ஆராயப்படும் என கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

சீனாவுக்கு அடுத்ததாக இலங்கை இராணுவ தளபாடங்களையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்கும் நாடாக பாகிஸ்தானே உள்ளது. இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக இந்த விஜயத்தின் போது முக்கிய கவனம் செலுத்தப் படும் என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவப் பயிற்சி, புலனாய்வு தகவல்களை பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் ஆயுத விநியோகம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இரு தரப்பு அரசியல் தலைவர்களுக்கும் இடையில் இப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாக அச் செய்திகள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் உயர் சக்தி ஆயுதங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய முக்கியமான சில நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்றாகும்.

இவ்வாறு பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிய ஆயுதங்களில் காலால் படை ஆயுதங்கள்,விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கான ரவைகள்,ஆட்டிலறி பீரங்கிகளுக்கான குண்டுகள்,யுத்த தாங்கிகள் மற்றும் விமானங்களுக்கான வெடிபொருட்கள், ஏவுகணைகள் மற்றும் வான் வெளியாக வீசப்படும் குண்டுகள் ஆகியன உள்ளடங்கும்.

வன்னியிலே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த போது 2008ஆம் ஆண்டு மே மாதம் அப்போதைய இலங்கையின் படைத் தளபதி சரத் பொன்சேகா பாகிஸ்தானுக்குச் சென்று ஆயுதப் படைகளுக்கு தேவையான உயர் சக்தி ஆயுதங்களை கொள்வனவு செய்திருந்தார்.

படைத்தரப்பினர் கிளிநொச்சியை கைப்பற்றுவதற்கான போரை நடத்துவதற்காக 12 நாட்களுக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் பாகிஸ்தான்–இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதக் கப்பல்களை அனுப்பி வைத்திருந்தது.

இதனூடாக தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிக்கும் இலங்கைப் படைத்தரப்பின் நடவடிக்கையில் பாகிஸ்தான் முக்கிய பங்கை வகுத்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புதிய எம்.பிக்களுக்கு...

அனைவரும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு அரச தரப்புக்கு மாறிய ஜே.ஸ்ரீரங்கா, உபேஷ்கா சுவர்ணமாலி மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படமாட்டாது.

சில ஊடகங்களில் குறிப்பிட்டதை போன்று ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவிற்கும் அமைச்சு பதவி வழங்கப்படமாட்டாது.

18ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் போது அரசுடன் இணைந்து கொண்ட பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ல் குணசேகரவுக்கு பிரதியமைச்சு பதவி வழங்கப்படலாம்.

அத்துடன்ரவூப் ஹக்கீம்,லஷ்மன் செனவிரத்ன,அப்துல் காதர் மற்றும் பிரதியமைச்சர்களான சரத் அமுனுகம, மகிந்தானந்த அளுத்கமகே, டிலான் பெரேரா ஆகியோருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என தெரிய வருகின்றது.

புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் பட்டியலை பூர்த்தியாக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜெயந்த மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் நேற்று நண்பகல் வரை ஈடுபட்டிருந்தனர்.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போது பாரிய மாற்றங்கள் ஏற்படாது என அக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ச-5)

இதோ!...உங்களோடு நாம்...

சகல விதமான கட்டட நிர்மாண மற்றும் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட அனைத்து வேலைகளும் அதற்கான சிறந்த தொழில்நுட்பவியலாளர்களினால் மிகவும் நேர்த்தியாகவும் திருப்தியாகவும் உரிய காலத்திலும் செய்து கொள்ள

Graphic Design and Builder

1.Building Construction
2.Building Planning
3.Council Drawings
4.BOQ
5.Estimates
6.Structural Designs

(அ-1653)

அனைத்திற்கும் உங்கள் நம்பிக்கைத் தெரிவு

No.26 B ,Brown Road, Jaffna.

(In front of Jaffna Technical College)

TP No.:- 0718474664

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.